அறைவு 04 இயம் 19 Dec 05 - 11, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தித் தனது உயிரை மாய்த்துக்கொண்ட மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனுக்கு முரசின் அஞ்சலிகள்

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

### மாடு மேய்க்கும் நிலத்தில் அத்துமீறிக் குடியேறியவர்கள் ஆயுதத்துடன்...!

# மட்டக்களப்பின் எல்லையில் தமிழர்கள் மீது தாக்குதல்

17

## "செந்தூரனின் நினைவேந்தல்"






அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி உயிர்க் கொடையளித்த செந்தூரனின் ஈகத்தை நினைவேந்துவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் பிரார்த்தனையும், நினைவேந்தல் சிற்றுரை- களும் 17

## ஐரோப்பிய ஒன்றியத்தின் 150 கோடி கிழக்கிற்கு!

### முதலமைச்சருக்கு உறுதி

ஐரோப்பிய ஒன்றியம் நூற்று ஐம்பது கோடி இலங்கை ரூபாய்களை ,எதிர்வரும் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்க உறுதியளித்துள்ளது.

எதிர்வரும் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியாக ஐநூறு கோடி இலங்கை ரூபாய்களை ஸ்ரீலங்கா அரசு பெற்றுக்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

அத் தொகையில் இருந்து கிழக்கிற்கான உதவி வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றிய உயர்ஸ்தானிகரும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிட பிரதிநிதியுமான டேவிட் டாலி கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமடுக்கு உறுதியளித்துள்ளார்.

நேற்று இவர்களுக்கிடையிலான சந்திப்பு 17



## ஐ.ஓ.சி யின் எல்லைகளை மேலும் அகலப்படுத்த முயற்சி

திருகோணமலையில் உள்ள இந்தியன் ஒயில் கோப்பரேசனின் எல்லைகளை அகலப்படுத்தும் முயற்சி தொடர்பாகக் கிழக்கு மாகாண முதலமைச்சருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டை அவரது அலுவலகத்தில் ஐஓசியின் உப தலைவர் சுனில் குமார் நக்டவுனே மற்றும் சிரேட்ட உப தலைவர் சிட்டம் ராஜு ஆகியோர் சந்தித்த போதே இம்முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தில் அமைந்துள்ள லங்கா ஐஓசியின் எல்லைகளை மேலும் 14 மீற்றர்களால் 17

## திருக்கோணேஸ்வரத்திற்கு இந்திய இராணுவத்தளபதி வருகை

திருகோணமலைக்கு கடந்த 2ம் திகதி (புதன்கிழமை) வருகை செய்த இந்திய இராணுவ தளபதி தல்பீர்சிங், வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டார். அன்று காலை 8 மணியளவில் தமது பாரியார் சகிதம் ஆலயத்திற்குச் சென்ற அவர், சிறப்பு பூசை வழிபாட்டில் ஈடுபட்டதுடன் ஆலயத்தின் விருந்தினர் பதிவேட்டில் கையெழுத்திட்டார்.



## இரசாயனப் பகுப்பாய்வின் முடிவில் சில உண்மைகள் வெளியாகும்?

திருகோணமலை வதைமுகாமில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் மீது இரசாயனப் பகுப்பாய்வை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் ஆணையில் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் இரசாயனப் பகுப்பாய்வின் போது சில உண்மைகளைக் கண்டறிய முடியும் எனத் தெரியவருகின்றது.

உடலங்கள் மீது இரசாயனப் பகுப்பாண்வை மேற்கொண்டு அவ்வுடலம் எப்போது புதைக்கப்பட்டது என்ற தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அமெரிக்க இரசாயனச் சங்கத்தினரின் கூட்டமொன்றில் முன்மொழியப்பட்ட ஆய்வறிக்கையின் போது ஆய்வாளர்கள் ஜோன்ஸ் மற்றும் டான் சைக்ஸ் ஆகியோரால் உறுதிப்படுத்தபட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதாவது கொலை நடந்த காலப்பகுதியைக் கண்டு பிடிக்க முடியும் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# செந்தூரனின் மரணமும் சிறையிருப்போரின் துயரமும்

செந்தூரன் தனது உயிர்க்கொடையை ஒரு அகால மரணவடுவாகத் தமிழ் மக்களின் மனங்களிற் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியிருந்த அவரது கடிதத்தின் அடிக்குறிப்பில் கலைப்பீடம் (Arts Faculty) என்ற வார்த்தையை அவர் எழுதியிருப்பதானது அவரது எதிர்காலக் கனவாக பல்கலைக்கழகக் கலைப்பீடம் இருந்திருக்குமோ என்று எம்மை எண்ணத் தூண்டியுள்ளது.

ஆனால் அந்தச் சிறுவனின் மரணம் எமது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

தனது உயிரைக் கொடையாகக் கொடுத்து, தனது இனத்தவர் சிறையில் வாடுவதை எதிர்த்து, அவர்களின் விடுதலையை வன்போக்கில் பெற்றுக்கொள்ளத் தனது உயிரைத் தாரை வார்த்த செந்தூரனின் உயிர்கொடையை முன்னிறுத்தித் தமிழ் இனம் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டிய போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் வாய்ப்பு இருந்தும் நாம் அமைதியாக இருந்தது ஏன்?

அந்தச் சிறுவனின் மரணம் எமது சமூகத்தில் நிகழ்த்திய தாக்கத்தின் வீரியம் அவ்வளவுதான்

ஆக, கடந்தகாலப் போர்களின் போதெல்லாம் நாங்கள் கண்டு அனுபவித்துப் புறந்தள்ளியும் பின் தொடரும் மரணம் எமது சமூகத்திற்கு ஒன்றும் பெரிய விடயம் அல்ல என்று நாங்கள் அனைவரும் நினைத்து விட்டோமா?

அல்லது இந்த மரணம் எந்த விதத்திலும் தேவையற்றது, ஏனெனில் அரசியல் கைதிகள் என்போர் என்றாவது விடுதலையாகி வரட்டும் அவர்களின் விடுதலையால் நமக்கென்ன நிகழப் போகின்றது என்ற மோதாவித்தனமா?

இவை எதுவாக இருந்தாலும், தமிழ் இனம் தாமே தெரிவு செய்த சனாதிபதியால்கூட வெறும் நூற்றுக்கணக்காக உள்ள அரசியல் கைதிகளை விடுவித்துப் பெறமுடியாமல் உள்ளனர் என்பதை தெளிவாக உலகின் காதுகளுக்கு அறிவித்து விட்டுச் சென்றுள்ளார் செந்தூரன்.

அன்னத்திற்கு நிபந்தனயின்றி வாக்களித்த தமிழ் மக்களின் முகத்தில் தனி மனிதாகச் செந்தூரன் பூசிவிட்டுச் சென்ற சேற்றை எம்மால் அழிக்க முடியாதுள்ளதால் செந்தூரனை மறக்கவும் அவர் பூசிய சேற்றை அழித்துவிடவும் எமக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு அவரை மறந்து, அவரது கொடையைக் கொச்சைப்படுத்தி தேசிய விசுவாசத்தை வெளிப்படுத்திக்கொண்டிருப்போரின் பின்னே அணி திரள்வதும் தான்.

நாங்கள் செந்தூரனை மறப்பதன் ஊடாக மீண்டும் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை உடைப்பில் போட்டுவிடத் தயாராகி விட்டோம்.

ஆனால் அரசியல் கைதிகளான தமிழர்களின் துயரம் தொடர்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியும் என்ற ஆரம்பக்கட்ட பேச்சில் இருந்து வழுகி அவர்களுக்கு புனர்வாழ்வளித்து விடுதலை செய்யும் முடிவிற்குள் அரசு இறங்கியது. எனினும் அவ்வாறு புனர்வாழ்வு அளிக்க முடியும் என்ற அறிவிப்பை அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கும் போது விடுத்தது அரசு. அவ்வறிவிப்பை நம்பி அரசியல் கைதிகளும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். இப்போது புனர்வாழ்வளிப்பதும் சட்டச்சிக்கலை உருவாக்கும் என்று தெரியவருகின்றது.

உறுதிமொழிகளை அல்லது கருத்துக்களை அரசு வழங்கும் போது அரசிற்கு அதனை நிறைவேற்ற முடியுமா அல்லது முடியாது என்பது பற்றித் தெரியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. அதாவது அரசியல் கைதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதில் சட்டச் சிக்கல் இருக்கும் என்பது அரசிற்குத் தெரிந்தும் அவ்வகையான வாக்குறுதியை வழங்க அரசு ஏன் முன்வந்தது? என்ற கேள்வியை எழுப்புவதன் ஊடாக தமிழ் மக்களின் அல்லது தமிழ் அரசியலின் பலவீனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

தமிழர்களிற்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அதனை நிறைவேற்றாமல் விடுவதால் காத்திரமான எதிர்ப்பை தமிழ் இனம் தன்னிச்சையாகவோ அல்லது தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டோ வெளிப்படுத்தப் போவதில்லை என்பதை அரசு சந்தேகமின்றிப் புரிந்து வைத்திருக்கின்றது.

எனவேதான் வாக்குறுதிகளை வழங்கி விட்டு அதனை நிறைவேற்றாமல் இருக்கின்றது அரசு.

தமக்கு புனர்வாழ்வளிக்க அரசு முன்வராது என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருக்கும் அரசியல் கைதிகள் அரசினால் முன்மொழியப்பட்ட புனர்வாழ்வளிப்பை ஏற்றுக்கொண்டதால் அரசை ஒரு இக்கட்டான சூழலுக்குள் இறுக்கி விட்டுள்ளனர்.

தமது துயரம் தொடர்கின்ற அதே வேளை நல்லாட்சி அரசின் முகமூடியைக் கிழித்திருக்கின்றனர். செந்தூரனோ தனது வாழ்வைத்துயர் மிக்க முடிவொன்றுக்குள் தானாகவே அமிழ்த்தி நல்லாட்சியின் முகமூடியைக் கிழத்திருக்கின்றார்.

# கைப்பற்றப்பட்ட வீடுகள் விடுவிப்பு அன்வர் மா.உ நடவடிக்கை

புல்மோட்டை பொன்மலைகுடா, அரிசிமலைப் பிரதேசத்தில் கடற்படையால் கைப்பற்றப்பட்டிருந்த வீடுகளை உடனடியாக உரியவர்களிடம் கையளிக்குமாறு மாவட்டச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

மாகாணசபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் அன்வரின் நடவடிக்கையை அடுத்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப் வீடுகளை 2010 ம் ஆண்டில் புல்மோட்டை கடற்படையின் ஆக்கிரமித்திருந்தனர்.

குறித்த விடயத்தினை பாதிக்கப்பட்டவர்கள் அன்வருடன் இணைந்து மாவட்டச் செயலாளருக்குத் தெளிவுபடுத்தியதை அடுத்து மாவட்ட செயலாளர் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்.

அத்துடன் குறித்த பகுதிக்குள் அரிசிமலை பௌத்த மத குருவால் அமைக்கப்படும் சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பாக, அந்நடவடிக்கையை நிறுத்தும்படி உடனடியாக பிரதேச செயலாளர் மற்றும் புல்மோட்டை காவல்துறையினருக்கு அரசாங்க அதிபர் பணித்ததுள்ளார்.

கிண்ணியா

# கிண்ணியா அஷிஷா நற்பணி மன்ற உதவிகள்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முள்ளிப்பொத்தானை, கந்தளாய், கிண்ணியா, புல்மோட்டை, சூரங்கள், தோப்பூர மற்றும் மூதூர் பிரதேசங்களில் கல்வி கற்கும் வறிய பாடசாலை மாணவர்களுக்கு முஸ்லிம் கெல்ப் ஜேர்மனி நாட்டு நிருவனத்தின் உதவியுடன் அஷிஷா நற்பணி மன்றம் கல்வி உதவிப் பொருட்களை வழங்கியது.

இவ்வுதவிகள் அப்பியாசக் கொப்பிகள், பாடசாபைப் பை உட்பட பல பொருட்களை உள்ளடக்கிய சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியானவை என நிகழ்வில் கலந்டது கொண்டு உதவிகளை வழங்கி வைத்த அஷிஷா நிறுவனத்தலைவர் சாதிக் ஹஷன் தெரிவித்தார்.

ஹலீம்



# சம்பூர் மக்களுக்கு உதவிகள்

கிழக்கு மாகாணசபையின் கல்வி கலாச்சார மீள்குடியேற்ற அமைச்சினால் சம்பூரில் இதுவரை குடியேறியுள்ள 382 குடும்பங்களில் ஆரம்பத்தில் குடியேறிய 345 குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பட்டியலுக்கமைவாக தலா 25 கிலோ முட்கம்பி கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி அவர்களால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன் உட்பட பலர் கலந்த கொண்டிருந்தனர்.


அச்சுதன்

# வாசிப்பு மாதப் போட்டிகளுக்குப் பரிசில்கள்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை நகரசபையின் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் மாணவர்களிற்கிடையே நடத்தப்பட்ட ஆக்க இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களிற்கான பரிசளிப்பு விழா 02.12.2015 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு பொது நூலகத்தில் கேட்போர் கூடத்தில் நூலகத்தின் பிரதம நூலகர் வயலட் எதிரி சூரிய தலைமையில் இடம்பெற்றது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நகர சபையின் முன்னாள் செயலாளர் ஏ. எல். எம். நபீல், நகர சபையின் செயலாளர் றிப்கா, சனசமூக உத்தியோகத்தர் முரளிதரன், நகரசபையின் கணக்காளர் ஜெயகணேசஸ் ஆகியோர் பரிசில்களை வழங்கி வைத்தனர். நூலகர் சேகவச்செல்வி சிறப்புரையாற்ற நூலுக உத்தியோகத்தர் ராம் கார்த்திக் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

அச்சுதன்




# வட்டார எல்லை நிர்ணய வரைபுகள் மத்திய அரசிடம்

புதிய தேர்தல் சீர் திருத்தத்திற்கு அமைய கடந்த அரசாங்க காலத்தில் தாயரிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பாகத் திருகோணமலை மாவட்டத்தின் முன்மொழிவுகள் சிலவற்றை நா.உ அப்துல்லா மஹ்ரூப் உள்ளூர்ராட்சி மாகண சபைகள் அமைச்சில் கையளித்துள்ளார்.

வட்டார எல்லை மீள் நிர்ணயம் முறையில் சமூகத்திற்கு நியாயமற்ற முறையில் சேதங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் நிர்ணயத்தின் போது பாரிய மோசடிகளும் நிகழ்ந்திருப்பதாக குற்றஞ்சாட்டப் பட்டதை அடுத்து எல்லை நிர்ணயத்திற்க்கு எதிராக மனுச் செய்வதற்க்கு வாய்ப்பளிந்திருநதது புதிய அரசு.

கிழக்கு மாகாண முற்போக்கு அமைப்பு, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா தலைமையில் மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளையும் உள்ளடக்கி எந்த இனத்தவருக்கும் தீங்கு ஏற்படாத வகையில் வட்டார மீள் நிர்ணயத்திற்கான முன்மொழிவுகளைத் தயாரித்திருந்ததாக அவ்வமைப்பினர் தெரிவித்தனர்.


ஹலீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

# கட்டாக்காலி மாடுகள்

## நிபந்தனையின் கீழ் விடுவிப்பு



மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச சபை பிரிவில் வீதிகளில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிந்த 40 மாடுகள் கடந்த புதன்கிழமை பிரதேச சபை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டதாக பிரதேச சபை வருமான பரிசோதகர் எம்.வசந்தகுமார் தெரிவித்தார்.
பிடிக்கப்பட்ட மாடுகளின் உரிமையாளர்களிடமிருந்து ஒரு மாட்டுக்கு 5,000 ரூபாய் வீதம் 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், நிபந்தனையின் கீழ் மாடுகள் விடுவிக்கப்பட்டதாக பிரதேச சபை செயலாளர் திருமதி.ஜே.அருள்பிரகாசம் தெரிவித்தார்.
குறித்த பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிகரித்துள்ள கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தினால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதை கருத்திற் கொண்டு மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரைக்கமைய பிரதேச சபை செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் இம்மாடுகள் பிடிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டாவது நாளாக தொடர்ந்த

## கவன ஈர்ப்பு போராட்டம்


சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பணிப்பெண்ணை காப்பாற்றுமாறு கோரி மட்டக்களப்பில் இரண்டாவது தினமாகவும் கடந்த வியாழக்கிழமை பெண்கள் அமைப்பினர் கவன ஈர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டு வந்தனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உட்பட சமூக ஆர்வலர்களும் இந்த போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.
இலங்கையை சேர்ந்த வீட்டுப் பணிப் பெண் ஒருவருக்கு நேற்று வெள்ளிக்கிழமை கல் எறிந்து கொலை செய்யவேண்டும் என சவூதி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அக்குறித்த பெண் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையிலும் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையே இருந்துவந்ததாக கவன ஈர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.



இதன்போது கவன ஈர்ப்பு வீதி நாடகமும் நாடக அசைவுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் பறை மேளமும்

# விபத்திற்குள்ளாக்கியவர் எனும்

## சந்தேகத்தின் பேரில் இராணுவ வீரர் கைது



வாழைச்சேனையில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் தரம் 08ல் கல்வி கற்கும் மாணவர்களான எம்.அனீக் மற்றும் ஏ.றிழா என்ற பாடசாலை மாணவர்கள் இருவர் காயமடைந்துள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

வாழைச்சேனை கும்புறுமூலை இராணுவ முகாமிற்கு சொந்தமான வாகனம் பாடசாலை மாணவர்கள் சென்ற துவிச்சக்கர வண்டியில் மோதுண்டதால் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

காயமடைந்த பாடசாலை மாணவர்கள் இருவரையும் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், வாகனத்தின் சாரதியான இராணுவ வீரர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், விபத்து சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வரவு-செலவுத் திட்டத்தில் வைத்திய அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு மற்றும் வாகன வரிச் சலுகை வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் நடைபெறும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.
போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக வைத்தியசாலை செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.
இதன்போது, அவசர சிகிச்சைப் பிரிவை தவிர வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, கிளினிக்குகள் உள்ளிட்ட பிரிவுகள் இயங்கவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# விவசாயிகள் மீது மோதல்

## குற்றவாளி யார்?

மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த விவசாயிகள் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.
மட்டக்களப்பில் நடத்தப்படும் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுக்காக கொழும்பு, கல்வியமைச்சிலிருந்து அதிகாரிகள் பயணித்த வாகனம், மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதான வீதியில் வலப்பக்கமாக நின்ற இவர்கள் மீது மோதியுதாக தெரியவருகின்றது. இந்த வீதியைக் குறுக்கிட்டு சைக்கிளொன்று சென்றதால், அதை வாகனம் விலத்திச் செல்ல முற்படுகையிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.
கிரான் கமநல சேவைகள் நிலையத்தில் மானிய உரம் பெறுவதற்காக வந்த முறக்கொட்டாஞ்சேனை, பாலையடித்தோணாவைச் சேர்ந்த எஸ்.நல்லம்மா (வயது 59), கிண்ணயடியைச் சேர்ந்த கே.மகேஸ்வரன் (வயது 49) ஆகியோரே படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் வாழைச்சேனை ஆதார

# இலவச பொருட்களை விற்போர் மீது சட்ட நடவடிக்கை

பொதுமக்களின் நலன் கருதி அரசாங்கத்தினால் மானியமாக அல்லது இலவசமாக வழங்கப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்யும் பயனாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தெரிவித்தார்.
மட்டக்களப்பு, ஏறாவூர் நகரில் தெரிவுசெய்யப்பட்ட 62 பயனாளிகளுக்கு சீமெந்து பக்கெட்டுகள் வழங்கும் நடவடிக்கை கடந்த புதன்கிழமை நடைபெற்றபோதே, அவர் இதனைக் கூறினார்.
இதன்போது, 62 பயனாளிகளுக்கு தலா பயனாளிக்கு 10 சீமெந்து பக்கெட்டுகள் வழங்கப்பட்டன. மேலும், மானியமாகவோ அல்லது இலவசமாகவோ வழங்கப்படும் பொருட்கள் விற்பனை செய்கின்றமை கண்டறியப்படின், அதன் பின்னர் அப்பயனாளிக்கு எந்தவொரு உதவியும் வழங்கப்பட மாட்டாதெனவும் அவர் கூறினார். வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் வழிகாட்டலில் நாடளாவிய ரீதியில் 25,000 வீடுகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,000 வீடுகள் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஜேர்மன் வல்லுநர்கள் கிழக்கு மாகாணத்துக்கு உதவி

ஜேர்மன் வல்லுநர்கள் கிழக்கு மாகாணத்துக்கு உதவ முன்வந்துள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் கடந்த புதன்கிழமை தெரிவித்தார். கடந்த புதன்கிழமை ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பிரிவின் பிரதி குழுத் தலைவர் வொல்ப்காங்க் ஹ்ருச்ஸ்கா மற்றும் டொக்டர் மைக்கல் டொஹ்மன் தலைமையிலான தூதுக்குழுவினர் கிழக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் போது, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் எல்லையிலுள்ள வெருகலில் புதிய தொழில் பயிற்சி நிலையமொன்றை உடனடியாக அமைப்பதற்கும் உதவுவதாக உறுதியளித்துள்ளனர். அத்துடன் கிண்ணியா மற்றும் கந்தளாய் பிரதேசங்களில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உறுதியளித்துள்ளனர்.

மேலும், கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலையத்துக்கு கிழக்கு மாகாண இளைஞர்களை உள்வாங்கி அங்கு தொழில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் நூலகங்களையும் பாடசாலைகளின் தகவல் தொழில்நுட்பப்பிரிவையும் அபிவிருத்தி செய்வதற்கு தம்மாலான உதவிகள் வழங்க உத்தேசிப்பதாகவும் முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபையில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டாட்சியின் நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் ஜேர்மன் நாட்டு தூதுக் குழுவினர் முதலமைச்சரிடம் தெரிவித்தனர்.

# தொழில் மத்திய நிலையம் திறப்பு

வடக்கு கிழக்கில் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அனைத்து உதவிகளை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவுள்ளதாக இலங்கை மற்றும் மலேசியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டேவிட் டலி தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர் யுவதிகள் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தொழில் மத்திய நிலையம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

# கடற்புலிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை

## -முன்னாள் கடற்படைத் தளபதி -



**முப்பது** லட்சம் ரூபாய்களை மாதமொன்றுக்கு வேதனமாகப் பெற்று அவன்காட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தில் ஆலொசகராகப் பணியாற்றிய முன்னைநாள் கடற்படைத் தளபதி தம்மால் கடற்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அட்மிரல் சோமதிலக்க திசநாயக்கவே இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

பாரிய மோசடிகள் தொடர்பாக ஆராயும் சனாதிபதி ஆணைக்குழுவிற்கு அளித்த நேர்முகத்தில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடற்படை கடற்பிரதேசம் முழவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாலும் விடுதலைப் புலிகள் இலகுவான ஆயதங்களையும் தமக்குத் தேவையானவற்றையும் கடல்வழியாகவே பெற்றுக்கொண்டனர் என இவர் தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்த காலத்தில் விடுதலை புலி உறுப்பினர்கள் தங்களுக்கு தேவையான கப்பல், நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளிட்ட போர் தளவாடங்களையும் கடல் மார்க்கமாகவே கொண்டுவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த சமயத்தில், இலங்கை கடற்படையினர் முழு கடற்பகுதியையும் தமது கண்காணிப்பில் வைத்திருந்த போதிலும், புலிகளின் இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் முன்னாள் கடற்படை தளபதி தெரிவித்தார்.

# தாஜுடீன் கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.




**ரக்பி** வீரர் மொஹமட் வசீம் தாஜுடீனின் மரணம் கொலையே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட வைத்திய குழு கடந்த 3ம் திகதி இவ்வாறு நீதிமன்றில் தெரிவித்தது.

அவர் கொல்ப்பட்டவுடன் எரிக்கப்பட்டடிருக்க வேண்டும் அல்லது உயிர் பிரியும் தறுவாயில் எரிக்கப்பட்டிருக்க வேண்டும் என மருத்துவ அறிக்கை தெரிவிக்கின்றது.

2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி நாரேம்பிட்டி சாலிகா விளையாட்டு மைதானத்திற்கு அருகில் சிற்றூர்தி ஒன்றுக்குள் எரிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார் தாஜுடீன்.

அவருக்கு விபத்தா கொலையா நிகழ்ந்தது என்பதை உறுதிப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ இறுதி அறிக்கை 3ம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது நடைபெற்றது விபத்து அல்லவெனவும், கொலையே எனவும் விசேட வைத்திய குழு அறிக்கையிட்டுள்ளது.

மரணத்துக்கான காரணம் கால்கள் , கழுத்து மற்றும் நெஞ்சுப் பகுதியில் ஏற்பட்ட பல்வேறு காயங்கள் என மருத்துவ குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த வேளையில் தாஜுடீன் காரை செலுத்திக் கொண்டிருக்கவில்லை எனவும், தாக்குதலுக்கு பின்னரே அவர் சாரதியின் ஆசனத்தில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அவரது உடலானது மரணத்தின் பின்னர் அல்லது உயிரிழக்க சிறிது நிமிடங்களுக்கு முன்னர் எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றில் பேசினார் மஹிந்த



**மு**ன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச நீண்டநாட்களின் பின்னர் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றினார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்திலே அவர் உரை நிகழ்த்துகிறார்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை, பயங்கரவாத நடவடிக்கைகளை தடுப்பதற்காக மாத்திரமே அறிமுகப்படுத்தியதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதனைவிடுத்து பாதுகாப்பு தரப்பினரை கைது செய்வதற்காக அந்த தடுப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொது தேர்தலின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் முதற்தடவையாக இன்று நாடாளுமன்றில் உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார்.

யுத்தின் பின்னர், நான்கு தடவைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்க முயற்சித்ததாக குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, வெளிநாடுகளின் தேவைகளுக்கமைய செயற்பட வேண்டாம் என அரசாங்கத்தை கோரியுள்ளார்.

## புகைப் பரிசீலிப்புக் கட்டணத்தைக் குறை மக்கள் எதிர்ப்பு

**வ**ரவு செலவு திட்டத்தில், புகை பரிசோதனை கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம் (5) முன் எடுக்கப்பட்டது.

புகை பரிசோதனை கட்டணம் அதிகரிக்கப்படுவதன் காரணமாக பாடசாலை மாணவர்களின் பெற்றோர், வாகனங்களுக்கான கட்டணத்தை செலுத்த முடியாதுள்ளதாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# 25 லட்சம் காசு - 75 லட்சம் பேச்சு

## காவல்துறைப் பொறுப்பதிகாரி கைது

**நா**ரஹேன்பிட்டி காவற்துறையின் முன்னாள் பொறுப்பதிகாரி உபுல் டம்மிக குணதிலக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

75 லட்ச ரூபாவை கையூட்டலாக கோரி அதில் 25 லட்சம் ரூபாவை பெற்று கொண்ட சம்பவம் தொடர்பிலே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலியான தகவல்களை தயாரித்த முறைப்பாடு தொடர்பிலான சந்தேகத்துக்குரியவரை கைது செய்யாதிருக்க குறித்த கையூட்டலை கோரியுள்ளதாக லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் முன்னதாக நாரஹேன்பிட்டி காவற்துறையின் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட அவர் கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

## இராணுவ வீரர் தூக்கில் !

**தூ**க்கிடப்ட்ட நிலையில் மஹகச்சிகொடிய இராணுவ முகாமுக்கு அருகில் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா காவற்துறைக்கு நேற்றிரவு கிடைத்த தகவலின் படி மரமொன்றில் தொங்கிய நிலையில் இருந்த இராணுவ வீரரின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

தலாவ பிரதேசத்தை சேர்ந்த 20 வயதானவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவர் இராணுவத்தின் பொறியியல் பிரிவில் இருந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகள் காவற்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# இலங்கையின் வானிலையிலும் மாற்றங்கள் ஏற்படலாம்

**இ**லங்கையின் மேற்காக மற்று வளி மணண்டலக் குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் மற்றுமொரு சூவளிமண்டலக் குழப்பமானது இலங்கையின் மேற்காக உருவாகி வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

இதன் காரணத்தினால் இலங்கையின் பல பகுதிகளில் மேகமூட்டத்துடன் மழையும் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் மதியம் 12.00 மணிக்குப் பின்னர் மழை காணப்படும்.

இடியுடன்கூடிய மழை காணப்படும் சந்தர்ப்பங்களில் காற்று பலமானதாக வீசும். இடிமின்னல் தாக்கத்திலிருந்து [illegible] ஏற்படும் சேதங்களைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு பொது மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடல் பிராந்தியங்களுக்கான வானிலை முன்னறிவிப்பும் [illegible] தெரிவிக்கின்றது.

# மரணதண்டனை எப்போது?

**இ**லங்கைப் பெண்ணொருவருக்கு சவுதி அரேபிய நீதிமன்றில் விதிக்கப்பட்ட மரண தண்டனை நேற்று நிறைவேற்றப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இத்தகவலை நேற்று பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

கல்லால் அடித்து இம்மரண தண்டனை நிறைவேற்றப்படுமென தெரிவிக்கப் படுகின்றது. எனினும் இன்று மரணதண்டனை நிறைவேற்றப்படுவோரின் பட்டியலில் இலங்கைப் பெண்ணின் பெயர் இல்லையென சவுதிக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்பெண்ணின் வழக்கு தொடர்பான சட்ட நடவடிக்கை தொடர்வதாகவும் , அடுத்தவாரமளவில் தூதுவராலய அதிகாரிகள் அவரைச் சந்திக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
உலகச் செய்திகள்

லண்டன்

## ஐஎஸ் சின் அடுத்த தாக்குதல் இலக்கு
# ஐக்கிய ராச்சியம்
### புலனாய்வு மிரட்டல்

ஐக்கியராச்சியமே ஐஎஸ் முஸ்லிம் தீவிரவாதிகளின் அடுத்த தாக்குதல் இலக்கு என ஐக்கியராச்சியத்தின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய புலனாய்வு முகவரகங்களின் உதவியுடன் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இத் தகவலை ஐக்கிய ராச்சியத்தின் புலனாய்வுப் பிரிவு விடுத்துள்ளது.

எனினும் இவ்வாறான தாக்குதல்கள் எங்கே, பெப்போது நடைபெறும் என்பவை பற்றிய தகவல்கள் தற்போதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என ஐக்கியராச்சிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிரியாவில் உள்ள ஐஎஸ் தீவிரவாத இலக்குகளின் மீது வான் தாக்குதலை நடாத்தும் ஐக்கிய ராச்சியத்தின் முடிவிற்கு கடந்த 2ம் திகதி ஐக்கியராச்சியத்தின் உயர்சபை அனுமதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

மலேசியா

### எம்எச் 380 தேடுதல்...
## சரியான இரண்டு இடங்கள் அடையாளம்

சுவடுவுணாமல் ஆக்கப்பட்டுள்ள மலேசிய விமானமான எம்எச் 230தைத் தேடம் பணிகளில் இடையறாத ஈடுபட்டுவரும் அவுஸ்திரேலிய நிறுவனம் தற்போதுதான் சரியான இரண்டு இடங்களை அடையாளப்படுத்தியிருப்பதாகச் சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலேசிய அவுஸ்திரேலிய இணைவுடன் இயங்கும் இத்தேடுதல் நடவடிக்கைக்குப் பொறுப்பான முகவர் நிலையம் இந்திய மாகடலில் முக்கியமான இடமொன்றைத் தாம் முதன்மைத் தேடுதல் இடமாக அடையாளப்படுத்தியிருப்பதாக அறிவித்துள்ளது.

இவ்விடம் முன்னரே தேடுதல் நடத்தப்பட்ட இடங்களில் எல்லையொன்றில் இருந்து தொடங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தனித்தனியாக மெற்கொள்ளப்பட்ட இரண்டு ஆய்வுகளின் முடிவுகள் இரண்டும் குறித்த இடத்தையே சுட்டி நிறபதாகத் தெரிவித்துள்ள இணை இயக்கம் தாம் சரியான இடத்திலேயே தேடுதலை ஆரம்பித்திருப்பதை அவை சுட்டி நிற்பதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

## கொலையாளியின் வீட்டில் 5000 சுடுகலன்கள் ??




அமெரிக்காவில் நடைபெற்ற சுடுகலச்சூட்டில் கொல்லப்பட்ட பதின்நான்கு அமெரிக்கர்களில் ஒன்பது பேரின் படங்கள் வெளியாகியுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் எண்மர் ஆண்கள் எனவும் அறுவர் பெண்கள் எனவும் தெரிவித்துள்ள பொக்ஸ் செய்திகள் அவர்களின் வயது வரம்பு 26 தொடக்கம் 60 வரை எனத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அவரது சவூதி மனைவியும் கடந்த 2ம் திகதி தென்கலிபோனியா நகரத்தில் நடைபெற்ற விருந்துபசாரக் களியாட்ட நிகழ்வில் நடத்திய சுடுகலச் சூட்டிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

குறித்த தம்பதியினரின் வீட்டினைச் சோதனையிட்ட போது அங்கிருந்த 5000ற்கும் மேற்பட்ட இயந்திர மற்றும் தன்னிச்சையற்ற சுடுகலன்கள், கைச்சுடுகல்ன்கள் ஆகியவற்றையும், ரவை மற்றும் குண்டுத் தயாரிப்பிற்கான பொருட்களையும் கைப்பற்றிய அமெரிக்க பெடரல் காவல்துறையினா் அதிர்ச்சியடைந்துள்ளனர். "சுடுகலன்கள் அந்த வீடெங்கும் சிதறிக் கிடந்தன. வீட்டில் எங்கு கைவைத்தாலும் ஆயுதங்கள் தான். அவற்றுள் பெரும்பாலானவை திருடப்பட்டவையாகவே இருக்க வேண்டும் என கொலையாளியின் வீட்டைச் சோதனையிட்ட புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் ஏன் நடைபெற்றது என்பது பற்றிய பின்னணிக் காரணங்கள் எவையும் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

## அமெரிக்கத் தீர்மானம் 2003 ம் ஆண்டைப் போன்றதல்ல
### ஒபாமா அறிவிப்பு



ஐஎஸ் தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்க விசேட படையினரில் மேலும் ஒரு தொகுதியினை அமெரிக்க ஈராக்கிற்கு அனுப்பவுள்ளது.

இத்தீர்மானத்தை அறிவிக்கும் போது அமெரிக்க அதிபர் ஒபாமா " அமெரிக்கப்படைகளை ஈராக்கில் அதிகரிப்பது ஈராக்கினுள் மேற்கொள்ளப்படும் ஊடுருவலாகக் கருதப்படக் கூடாது" எனத் தெரிவித்துள்ளார்.

2003ம் ஆண்டில் அமெரிக்கப்படைகள் ஈராக்கினுள் புகுந்து ஈராக்கைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை இவ்வாறு அதிகரிக்கப்படும் படையினரின் நடவடிக்கை நினைவுபடுத்தக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பான் மிட்சுபிசி நிறுவனம் தயாரித்த முதலாவது விமானம் வானில்...!




ஜப்பானின் சொந்தத் தயாரிப்பான பயணிகள் விமானமொன்று வானில் பறந்து தனது பயிற்சிப் பறப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது

குறித்த விமானத்தை ஜப்பானின் மோட்டார் உற்பத்திதுறையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான மிட்சுபிசி நிறுவனம் தயாரித்துள்ளது.

சிறியரக பிராந்திய வான் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ள இவ்விமான மானது நூற இருக்கைகளுக்குக் குறைந் இருக்கைகளைக் கொண்ட விமானத் தரப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளது.

வெற்றிகரமான பறப்பின் முடிவில் உடனடியாகவே 15 விமானங்களை உற்பத்தி செய்யும் கட்டளைகளை மிட்சுபிசி கம்பனி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் படை வருகை ஒரு கைப்பற்றல் நடவடிக்கையே !
### ஈராக் அறிவிப்பு



அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்துவதை எப்போதுமே ஈராக் விரும்பவில்லை என அந்நாட்டின் பிரதமர் அறிவித்துள்ளார்.

பிரதமர் ஹைதர் அல் அபாதி விடுத்துள்ள செய்தியில் அமெரிக்க விசேட படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் தீர்மானமானது ஈராக்கை மீண்டும் அமெரிக்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் ஒரு செயற்பாடாகவே கருதப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவக் கேணல் ஸ்டீவ்ஸ் மேலும் சுமார் 100 விசேட அமெரிக்கக் கொமாண்டோக்கள் ஐஎஸ் தீவிரவாத அழிப்பு நடவடிக்கைக்காக அனுப்படவுள்ளனர் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

MALAIMURASU

# தாயகச் செய்திகள்

## தலைமன்னாரில் உருக்குலைந்த நிலையில் சடலம்

தலைமன்னார் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலமொன்று கரையொதுங்கி -யுள்ளது.

அடையாளம் காண முடியாதவாறு இந்த சடலம் உருக்குலைந்து காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சடலத்தின் கையில் எச். ருபினா என பச்சை குத்தப்பட்டி-ருப்பதாகவும் இந்த சடலம் தொடர்பில் தலைமன்னார் காவல்துறை மேலதிக விசாரணை-களை மேற்கொண்டு வருகின்றனர்.

## எரிகாயங்களுடன் சடலம் மீட்பு

யாழ். அரியாலை பகுதியில் எரிகாயங்களுடன் பெண்ணின் சடலமொன்று கடந்த வியாழக் கிழமை (03) கண்டெடுக்கப் பட்டுள்ளது.

மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்து-ள்ளனர்.

தனக்குத் தானே தீ மூட்டி இந்த பெண் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதாகவும் காவல் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். காவல்துறை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிப்பாய்களுக்கிடையிலான மோதலில் காது அறுபட்டது!

யாழ். காங்கேசன்துறை பகுதியில் அமைந்துள்ள 5ஆம் சீ.எஸ்.சீ படை முகாமில் நேற்று வியாழக்கிழமை (03) இராணுவ சிப்பாய்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் றொசான்திலகசிரீ என்ற சிப்பாய், காது அறுப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், இருவர் சிறு காயங்களுடன் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மூன்று சிப்பாய்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்ததன் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

## சென்னை வெள்ளம் தொடர்பாக கரிசனை

சம்பந்தன்



இந்தியாவின் நான்காவது பெரிய நகரான சென்னையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மிகுந்த கரிசனையோடு உள்ளதாக எதிர்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றத்தினால் தமது சொந்தங்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அனர்த்ததினால் வாழ்வாதாரங்களையும் சொத்துக்களையும் இழந்து , இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வாழும் மக்களினது துயரில் தாம் பங்கேற்பதாகவும் ,எதிர்கட்சி தலைவர் தமது அறிக்கையின் மூலம் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை தளர்ச்சியடையாமல் வழங்கி கொண்டிருக்கும் தமிழக அரசிற்கும் , ஏனைய அரச மற்றும் தனியார் ஸ்தாபனங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் எதிர்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த நிலைமை விரைவில் வழமைக்கு திரும்பி மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு மாறுவதற்கு தாம் இறைவனை பிரார்த்திப்பதாகவும் எதிர்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் தமது அறிக்கையூடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## “மகேஸ்வரனைக் கொன்றவர் இங்குதான் இருக்கின்றார்”

### சபையில் அமைச்சர் விஜயகலா போட்டுடைப்பு

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனை படுகொலைசெய்த சூத்திரதாரி இந்தச் சபையில் இருக்கின்றார் என்று நாடாளுமன்றில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா தகவல் வெளியிட்டுள்ளார். இந்தக் கொலையைச் செய்தவர் யார் என்பதை வெளிப்படுத்தி அவரை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். இதற்காக மகேஸ்வரன் படுகொலை தொடர்பான விசாரணை மீண்டும் இடம்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று பிற்பகல் இடம்பெற்ற நீதி மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டு வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

12 ஆயிரம் முன்னாள் போராளிகளை விடுதலைசெய்தபோது எதுவும் கூறாதவர்கள் இப்போது சிறைகளிலுள்ள 217 அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கு எதிராக பேசுகின்றனர். இந்த விடயத்தில் எதிர்க்கட்சியிலுள்ள ஒருசில இனவாதிகளுக்காக எமது தமிழ் மக்களை




அரசு பணயம் வைக்கவேண்டாம்.

ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன், லசந்த விக்கிரமதுங்க, நிமலராஜன் படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் சரியாக முடியவில்லை. மகேஸ்வரன் தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்தவர்.

அவருக்கு வழங்கப்பட்டிருந்த 1 5 மெய்ப்பாதுகாவலர்களையும் கடந்த கால அரசு நீக்கியது. இப்படி செய்ய உத்தரவிட்ட அதிகாரிகள் யார்? இது குறித்து விசாரணை செய்யவேண்டும்.

மகேஸ்வரனை படுகொலைசெய்த சூத்திரதாரி இந்தச் சபையில் இருக்கிறார். அவர் யார் என்பது கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். இதற்காக மகேஸ்வரன் படுகொலை தொடர்பான விசாரணைகள் மீண்டும்

## உயர் அரச பதவிகளுக்கு தமிழர்கள் நியமிக்கப்பட வேண்டும்!



உயர் பதவிகளுக்குத் தமிழர்களை நியமிப்பதன் ஊடாகத் தமிழர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்கிறார் சித்தார்த்தன்.

உதவிப் காவல் அத்தியட்சகர் உட்பட உயர் பதவிகளுக்கு தமிழர்களை நியமிப்பதனூடாக தமிழ் மக்களுக்கு பொலிஸார் மீதான நம்பிக்கை ஏற்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சின் மீதான குழுநிலை விவாதம் பாராளுமன்றில் இன்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறையில் வாடும் கைதிகளை விடுதலை செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கில் பல்வேறு சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பல்வேறு குற்ற சம்பவங்களின் போது காவலர் அசிரத்தையுடன் நடப்பதாக மக்கள் நம்புகின்றனர். வடக்கில் பணியாற்றும் பொலிஸாருக்கு மொழி பிரச்சினை காணப்படுகிறது. தமிழ் பாவலரின் பதவி உயர்வு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சென்னைக்கு செல்லும் உதவிகள்

### வடமாகாண சபையில்





மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்றிற்கு அழைப்பு விடுத்துள்ளது வட மாகாணசபை.

இவ்விடயம் தொடர்பில் வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டடுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் அமைச்சர்கள் மற்றும், உறுப்பினர்களுக் கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடமாகாண சபை கட்டிடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

இதன்போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது குறித்து ஆராயப்படவுள்ளதுடன், அதில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுகொள்கிறேன் என அவர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## பெரிதாய் அழுவான்

எழுந்து நில்! குனிந்து
ஒருதரம் மண்ணை
முத்தமிடு!

நிமிர்ந்து வானத்தை
அண்ணார்ந்து பார்!

உன் அண்ணாச்சி
அக்காச்சி மாமன் மகன்
சித்தப்பா மகளென

எல்லோரும் நின்று
சிரிப்பார்கள் உற்றுப்பார்!
கூடியாடி

உன்னோடு விளையாடிய
தோழி கண்களில் வீரமேந்தி
நின்று

புன்னகைப்பாள் அதோ
அவனை தெரிகிறதா
உனக்கு ?

அமைதிப்படை வந்தபோது
அவன் சிறுவன் -அந்த
அரக்கர்

படை திரும்பும் போது அவன்
மறவன் தேர்தலுக்கு

சுவரொட்டி ஒட்டும்போது
வாய்க்காலுக்குள் விழுந்து

செத்தவனல்ல போர்
கொண்டு ஊர்
புகுந்தோரோடு

பொருதினான்
மாண்டுவிட்டான்! குனி! இது
விளக்கேற்றும்

நேரம் கும்பிடு
தெய்வங்களை
அழுவதுபோல் பாசாங்கு

செய்யாதே அவர்கள்
ஆத்திரப்படுவார்கள்
எழுவோம்

எனச்சொல்லி அறிக்கை
விடாதே அவர்கள்
மாவீரர்கள்

ஊழித்தீ பரவி ஊரை
அழித்த போது
காளித்தெய்வமாகி

எமை காப்பாற்றி
விட்டவர்கள் இன்றவர்கள்
கல்லறைகள்

இங்கில்லை நின்று
விளக்கேற்ற ஒரு சாண்
நிலமில்லை

"மொழியாகி எங்கள்"
பாடவொரு வழியுமில்லை!

அழுது

அழுது வான்மழை
தேடுறது அவர்
கல்லறைகளை

காணாத்தவிப்பில்
வெள்ளப்படை கொண்டு
கிளறுகிறது

நிலத்தை! வீரர்கள்
மேனியை தழுவ முடியாத
தவிப்பில்

நெஞ்சிலடித்து குழறுகிறது
காற்று! ஆங்காங்கே
இருந்து

எழும்பும் நெய்விளக்கின்
ஒளியில் கண் கூசுமென

முகிலைக் கொண்டு முகம்
மறைத்து அழும் நிலவுக்கு

பெருத்த ஏமாற்றம்! எங்கே
ஒரு சுடரையும்
காணவில்லை

யென கண்ணீர் வடிக்கிறது
எம்மைப்பார்! நீ வாட்ஸ்
அப்பில்!

நான் பேஸ்புக்கில்! வாக்கு
கேட்டுவரும் வள்ளல்
பெருந்தகைகள்

சிலர் அறிக்கை விடுவர்
சிலர் கவிதை வடிப்பர்
ஓரிருவர்

ஒளித்து நின்று
விளக்கேற்றுவர்
தினசரிக்கு நான் முந்தி நீ

முந்தியென
பேட்டியளிப்பர்!
இந்தளவும் தான்
இதற்குமேல்

ஒன்றுமில்லை ! வெறும்
உயிரைத்தானே
கொடுத்தார்கள்

அதற்கேன் பெரிதாய்
அழுவான்?

மு.யாழவன்
திருகோணமலை




## அவர்களுக்குத் தெரியாது

நேற்று ஒருவன் இறந்தான்!
அது
நானல்ல. நீயல்ல.

இன்று ஒருவன் இறந்தான்.
அது நானோ நீயோ அல்ல.

நாளை ஒருவன் இறந்தால் - அது
நான் அல்லது நீ
நிச்சயமாக
எம்மில் ஒருவர் தான் தோழா!

அதிகாலை
கவசவண்டிகளின்
நடமாட்டம் அதிகரிக்க
கிராமத்துத் தெரு
இழுத்து மூடப்படும்

அப்போது நான் அல்லது நீ
நிச்சமாகக் கைது செய்யப்படலாம்
அல்லது
சுட்டுக் கொல்லப்படலாம்!
நானும் நீயும் மனிதர்களென்று
அவர்களுக்குத் தெரியாது.
அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்
நானும் நீயும்
மனிதர்கள் அல்ல
என்பதுதான்.

துஷ்யந்தன்

## முடித்தேன்

எழுத்து முடிந்துள்ளது.
எழுதுகோல் ஓய்வுபெறும்!
கழுத்தும் வலிக்காது.
கண்களிலும் நீர் வாரா!

ஐம்பது இரண்டிருந்து
அறுபத்திரண்டாய்(2014)
நம்பி வரைந்ததெதும்
நடக்கவே இல்லையடா!

பாடினர் பாரதியார்.
பறந்ததடக்கு முறை!
'ஆடி'னோம் நாமிங்கு.
அடக்கி ஒடுக்கியுளார்!

படிப்பும் முடிந்துளது.
பார்வை அரைக்குருடு!
முடிக்கும்முதல் தமிழை.
முடித்தேன் எனை நானே!

'தாமரைத்தீவான்'
(ஈச்சந்தீவு-

"மரணத்துள் வாழ்வோம்"

## மனதினிலே மலர் தூவி உளமார பூஜிப்போம்.


தேசம் காக்க கோச மேற்றவர்கள்
கொன்று ஒழிக்கப்பட்டனர்
வேட தாரிகளின் விரந்துரைப்பால்...
குலதெய்வ கோயில்கள் தகர்க்கப்பட்டன
கும்பிட போனவர்கள்
தண்டிக்கப் பட்டனர்...
விழி திறந்து எமை காத்து
வித்தான மொட்டுக்கள்
முடி தரித்த வஞ்சகரால்
முள்ளி வாய்க்காலில் முகவரி
அழிக்கப்பட்டனர்...
முடியாது எவராலும் முடியாது
மடிந்த மேன் மக்கள்
மகத்துவ நினைவுகளை மலுங்கடிக்க
மாசற்றவர் கனவுகள் மலர
மனதினிலே மலர் தூவி
உளவரமான பூஜிப்போம்!

புலோலியூர்
- காவியா -

## இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

சுமார் நாற்பது ஆண்டுகாலம் இலங்கையை நீதி தவறாது சிறப்பாக ஆட்சிபுரிந்த எல்லாள (கி.மு. 205 - 161) மன்னனின் ஆட்சிக்குட்பட்ட மிகிந்தலைக்கு அண்மையில் இருந்த துவார மண்டலம் என்ற கிராமத்தில் குண்டல(ன்) எனப்பெயர் கொண்ட பிராமணன் இருந்தான். இவன் துட்டகைமுனுவின் தந்தை காக்க வண்ணதீசனுக்கு ஆதரவாளனாக செயற்பட்டான் என மகாவம்சம் சொல்கிறது. அதேவேளை காக்க வண்ணதீசனின் புரோகிதனாக இருந்த பிராமணனின் மகள் கிரிகாலி பற்றி தீபவம்சம் கூறுகின்றது. இவள் பின்னர் பிக்குனி சங்கத்தில் சேர்ந்துகொண்டாள்.



இவற்றைத் தொடர்ந்து வட்டகாமினி அபயன் (கி.மு. 104 - 103, 89 - 76) காலத்தில் திஸ்ஸ எனும் பிராமணன் பௌத்தமத விவகாரங்களுக்கு குறிப்பிடத்தக்களவு விளைவினை ஏற்படுத்திய பெரும்கலகம் ஒன்றினைச் செய்தான் என அறியக்கிடக்கின்றது. மகாவம்சம் தரும் மேற்குறித்த ஆதாரங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆறாம் நூற்றாண்டில் இருந்து கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் பிராமணர்களின் நடவடிக்கைகள் இடையூறின்றி இருந்துவந்ததை ஆதாரப்படு த்துகின்றது.

**பிராமிச்சாஸனங்கள் தரும் தகவல்கள்**

மகாவம்சத்தைப் போலவே வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கையில் பிராமணர் தொடர்புடைய முக்கி தகவல் - களைத் தருவது குகைக் கல் வெட்டுக்களாகும். இவை கிறிஸ்த்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைச் சேர்ந்தவை. இவை குகைகளுடன் தொடர்புடைய பிராமியில் அமைந்த சாசனங்களாகும். பிராமணர்கள் பற்றிய குறிப்புகளைக் தரும் இச்சாசனங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

- குகை உரிமை தொடர்புடையவை
- குகைத்தானம் தொடர்புடையவை
- பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்ற பிரமணர்கள் தொடர்புடையவை

பிராமிச்சாசனங்களில் சில குகைகளின் உரிமையாளராக பிராமணர்களைக் குறித்து நிற்கிறது. அனுராதபுரம் யாங்கல என்ற இடத்தில் கிடைத்த சாசனம் கோஸிகன் என்ற பிராமணணின் மகன் விஜிதஸேனனின் குகை அதுவெனஅடையாளம் காட்டுகிறது. உத்தரஎன்ற பிராமணனின்மகன் குட்ட என்பவனின் குகை அனுராதபுரம் நிற்றிகல அன்டியகந்த என்னும் இடத்தில் இருக்கிறது. அம்பாந்தோட்டையின் மண்டகல என்ற இடத்தில் பூதி எனும் பிராமணனின் குகையும், மகாஸிதுல்பவுவ என்ற இடத்தில் வச்ச என்ற பிராமணது குகையும் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டியிலுள்ள பம்பறகல என்ற இடத்தில் பிராமணப்பெண் தத்த என்பவளது குகை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பெண் கொஜற என்ற பிராமணனின் மகள் என்பதுடன் நாக அரசன் பொசனி என்பவனின் மனைவி என்பதை பிரமிச்சாசனம் உறுதிப்படுத்துகிறது. பிரமிச்சாசனங்களில் பெரும்பாலானவை குகைதானம் தொடர்பானவை. இவை பிராமணர்களால் பௌத்த சங்கத்துக்குகுகை தானமளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

தொடரும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன் மைத்திரியை நம்பலாம் : இவர்களை நம்பாத செந்தூரன்.....

## நிதிமீதுள்ள கவனம் எப்போது நீதிமீது திரும்பும்!!!

தயாளன்

போராளிகளின் மனது மென்மையானது. தன்னுடைய இனத்துக்கு எதிராக நடைபெறும் ஒடுக்குமுறைகளைச் சகிக்க முடியாதவர்களே போராடுகின்றனர். அதையெல்லாம் சகித்துக் கொண்டு வாழும் தன்மையுடையவர்களே வெளியில் வாழ்கிறார்கள்" விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லெப்.சீலன் (லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி) அடிக்கடி கூறும் விடயம் இது. 1983 இல் தான் தமிழ் இளைஞர்கள் பெருமெடுப்பில் பல்வேறு இயக்கங்களில் இணைந்து கொண்டனர். இவர்களில் 65 சத வீதத்துக்கு மேலானோர் இதுவரை காலமும் எவர் மீதும் வன்முறையைப் பிரயோகிக்காதவர்கள். இவனும் இயக்கத்துக்குப் போனானா? என மற்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் வாழ்ந்தவர்கள். எனவே ஒருவனின் கடந்த கால வாழ்வை வைத்து அவனது முடிவுகள் குறித்து அனுமானிக்க முடியாது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடைபெறும் விடயங்கள் தொடர்பாக வெளிவரும் கருத்துகள் பெரும்பாலும் யானை பார்த்த குருடர்கள் நிலையிலானவை. தங்களது ஆய்வின் வித்துவத் தன்மையைப் பறைசாற்றும் நோக்கிலானவை. பெரும்பாலும் பொது வாழ்வுக்கு தமது உயிரையோ உதிரத்தையோ உழைப்பையோ கொடுக்கத் தயாரில்லாதவர்களே. அந்த உணர்வுகளை எந்தக் காலத்திலும் புரிந்து கொள்ள முடியாதவர்களே பல்வேறு சந்தேகங்களையும் கேள்விகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஒரு வித்துவான் எழுதுகிறார். "பாடசாலையில் எவருடனும் சேர்ந்து திரிவதில்லை. அமைதியையே விரும்புவான். உயர்தரத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்கின்றான் போன்ற பதில்களே கிடைத்தன. இதை வைத்துப் பார்க்கும் போது அந்தக் கடிதத்துக்கும் மாணவனுடைய சாவுக்கும் உள்ள தொடர்பைப் புரிவது கடினமாகவே உள்ளன. பாடசாலை நண்பர்கள் வெளிநண்பர்களிடத்திலும் மாணவன் தொடர்பான அரசியல் சார்ந்த விபரங்கள் எதுவும் வெளிப்படவில்லை இவ்வாறு இருக்கும் போது மாணவன் எப்படி அவ்வாறான ஒரு கடிதத்தை எழுதினான்" இவ்வாறாக வினாக்களை அடுக்கி வைத்தார் அந்த வித்துவான்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வற்புறுத்தும் முகமாக. தனது உயிரை ஈகம் செய்த 18 வயது நிரம்பிய இராஜேஸ்வரன் செந்தூரன் என்பவர் தொடர்பாகவே அவர் இவ்வாறு எழுதுகிறார். பல வித்துவான்கள் மாணவன் சாவு தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இவ்வளவு புலனாய்வு செய்பவர்களை முன்னரே தெரிந்திருந்தால் பொட்டம்மான் தன்னுடன் இணைத்திருப்பார்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆங்கிலேயப் பிரதிநிதி ஒருவர் தனது குறிப்பில் "சட்டத்துக்கு கீழ்ப்படியும் அமைதியான ஒழுக்கமான மக்கள்" என்றே யாழ்ப்பாணத்தவர் பற்றி எழுதியுள்ளார். 1977 இற்கு முன்னதாக இலங்கைப் புகையிரத சேவைக்கு அதிக வருமானத்தைக் கொடுக்கும் சேவையாக வடபகுதி சேவையே விளங்கியது. இவர்கள் தான் தவறாமல் புகையிரதச் சீட்டு வாங்கிப் பயணிப்பவர்கள். அக் காலகட்டத்தில் கரையோர சேவையைப் பொறுத்த வரை 50 வீதமானோர் சீட்டின்றிப் பயணிப்பவர்களே. வானொலிப் பெட்டிக்கான உரிமம் துவிச்சக்கர வண்டிக்கான உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து அனுமதி பெறுதல் போன்றவை மட்டுமல்ல வங்கிக் கடன்களை முழுமையாகச் செலுத்துவதிலும் யாழ்ப்பாணத்தவர் முன்னிலை வகித்தவர்.

அப்படியாக சட்டத்துக்கும் கட்டுப்பட்ட குடும்பங்களில் இருந்து வந்தோர் தான் ஆயுதப் போராட்டத்துக்குள் அடியெடுத்து வைத்தனர். ஏன் ஒரு சனசமூக நிலையத்தின் தலைவராக இருந்த சண்முகநாதன் சிவசங்கர் என்பவரை பொட்டம்மான் என்று உருவாக்கியதே யாழ்ப்பாண நூலக எரிப்புத் தான். அதுவரை அவர் எந்த அரசியல் சார்ந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

"அரசியல் கைதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உணவுத் தவிர்ப்பை தற்காலிகமாக நிறுத்தி ஒரு முடிவுக்கு கொண்டு வந்துள்ள இந்தச் சூழ்நிலையில் அரசியல் கைதிகள் தொடர்பில் உயிரையே விடுமளவுக்கு உணர்வு பீறிட்ட காரணத்தின் தாற்பரியம் தான் என்ன என்பன போன்ற விடயங்கள் இங்கே மீண்டும் கேள்விகளாக்கப்படுகின்றன"



என்ற குறிப்பின் மூலம் இந்த விடயத்தை இந்த வித்துவான்கள் எவ்வளவு தூரம் விளங்கிக் கொண்டுள்ளனர் என்பது புரிகிறது.

'அரசாங்கத்தின் நம்பிக்கையீனப் போக்குகளின் மீதான வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வெறுப்புத் தன்மையையும் அவர்களது மனதளவிலான உச்சங்களையும் பிரதிபலித்து நிற்பதாகவே யாழ் மாணவன் செந்தூரனின் முடிவு அமைந்துள்ளது. இந்தச் செயற்பாட்டின் பின்புலங்களை விளங்கிக் கொள்ள வேண்டும்'' என இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மாவீரர் தினத்தன்று நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார். "மைத்திரி கடவுளை நம்புகிறார். நான் மைத்திரியை நம்புகிறேன்' என அரசியல் கைதிகளிடம் கூறியே அவர் உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

"கடந்த காலம் பற்றி யாருமே சரியான தகவல் பெற்றிருக்கவில்லை. அதனால் தான் நிகழ்காலத்தைப் பற்றி சோகமான ஏக்கமான முடிவினை எடுக்கிறார்கள்" என தாமஸ் மெக்காலே என்ற அறிஞர் கூறியுள்ளார். (விளக்குகள் தந்த ஒளி). டி.எஸ்--பண்டா—டட்லி—ஜே.ஆர் என தொடர்ச்சியாக ஏமாந்த அனுபவம் தமிழ்த் தலைமைகளிடம் இருந்தும் மைத்திரி தொடர்பாக இவ்வாறு உறுதியளித்தார் சம்பந்தன்.

மீண்டும் உண்ணாவிரதம் தொடங்கிய நிலையில் மருத்துவ காரணங்களுக்காக அவர் இந்தியா சென்று விட்டார். மைத்திரி கடவுளை நம்பலாம் சம்பந்தன் அவரை நம்பலாம் ஆனால் அரசியல் கைதிகள் விடயத்தில் எவரையும் நான் நம்பவில்லை என்பதே தமிழ் மக்களுக்கு மாணவன் செந்தூரன் விடுத்துள்ள அழுத்தமான செய்தி. எனவே 10 பிள்ளை பெற்றவளுக்கு மலடி முக்கிக் காட்டியது போல் யாழ்ப்பாணத்தவர்களுக்கு கதை சொல்ல வேண்டாம் என்பதே இந்த ஆய்வாளர்களிடம் நாம் விடுக்கும் வேண்டுகோள். விளங்காவிட்டால் அதை ஆராய முற்பட வேண்டுமே தவிர அறிவுரை வழங்கக் கூடாது.

இந்த அரசியல் கைதிகள் யார்? பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்தவர்கள். என்றும் சிலருக்கு ஏதோ ஒரு வகையில் சிறையில் இருந்து வெளியே செல்ல சந்தர்ப்பம் கிட்டுமாயின் அதற்கு ஏனையோர் முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என எண்ணுபவர்கள். ஏனெனில் அவர்களது கடந்த கால வாழ்க்கை மற்றவர்க-ளுக்காகவே அமைந்தது. துரதிஷ்டவசமாக சிறையில் இருக்கிறார்கள். 1991 இல் இருந்து விஜி (செல்லப்பிள்ளை மகேந்திரன் முறக்கொட்டாஞ்சேனை) நீண்ட காலமாக சிறையில் இருக்கிறார். 17 வயதில் சிறைப்பட்டவர் இவர். இவர் வெளியுலகத்தில் வாழ்ந்த காலத்தை விட சிறைக்குள் வாழ்ந்த காலம் தான் அதிகமாகிறது.

இன்று கைதிகளைத் தரம் பிரிக்க கூட்டமைப்புத் தலைமை அரசுடன் உடன்பாடு கண்டுள்ளது. "தகுதியானோ-ருக்கு வாக்களியுங்கள்". என்று கடந்த பொதுத் தேர்தலின் போது வடக்கு முதல்வர் கூறினார். அப்படித் தரம் பிரிக்கக் கூடாது ஜனா-- ,இரா.துரைரத்தினம் போன்ற படுகொலையாளர்கள் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களிக்க வேண்டும் என்று அவர் கூறியிருக்க வேண்டும். எனவே அவரைக் கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என்று வாதாடும் பி.எம்.டபிள்யூ காரர்கள் தான் கைதிகளைத் தரம் பிரிக்க ஒத்துக் கொண்டனர்.

ஜே.வி.பி யினரை எந்தக் கேள்வியும் கேட்காமல் தரம் பிரிக்காமல் ஒட்டுமொத்தமாக விடுதலை செய்ய என்ன சூத்திரம் மந்திரம் வைத்திருந்தீர்களோ அதையே பயன்படுத்துங்கள் என்று மைத்திரியிடம் சொல்ல இந்த சட்டத்தரணித் தலைமைகளால் முடியவில்லை. "எங்கள் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன புலம்பெயர்ந்த தேசத்தவர்களிடம் நிதியுதவி கோரி எங்கள் குடும்பங்களுக்கு உதவலாமே" எனக் கேட்டனர் அரசியல் கைதிகள்.. அதற்கு "முன்னர் புலிகள் இருந்தனர் கேட்டவுடன் காசு கிடைத்தது இப்போது நிலைமை அப்படியல்ல. எங்கள் கட்சியிடமும் நிதியில்லை கடந்த தேர்தலுக்கு செலவு செய்யக் காசில்லாமல் கஷ்டப்பட்டோம்." என்று கூறுபவரிடம் தான் சம்பந்தன் ஐயா அரசியல் கைதிகளின் விவகாரத்தை ஒப்படைத்துள்ளார். கைதிகளின் குடும்பம் வறுமையில் வாடுவதையும் கட்சி தேர்தலுக்கு செலவழிக்க நிதியில்லாமல் இருப்பதையும் ஒன்றாகப் பார்ப்பவருக்குத்தான் யாழ் மக்கள் இப்போது 58 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளனர். இவர்களுக்கு எப்போதும் நீதியின் மீது கவனம் இல்லை. நிதியின் மீது தான் உள்ளது. அதனால் தான் வடக்கு முதல்வர் நிதிகேட்டு கனடா போக மறுத்தார் என்றும் குற்றம் சாட்டுகின்றனர். ஒரு வழக்கில் கிடைக்கும் காசுக்காக புலிகளைப் பயங்கரவாதிகள் என கிளிநொச்சி நீதிமன்றில் கூறியவரே கைதிகள் விடயத்தில் கையாளுகின்றார்.

சம்பந்தன் ஐயாவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி செல்வம் அடைக்கலநாதனின் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி இரண்டையும் அடைவு வைத்தேனும் எமக்கு விடுதலை பெற்றுத் தாருங்கள் என்று அரசியல் கைதிகள் விடுத்த வேண்டுகோளின் தாற்பரியம் செந்தூரனுக்குப் புரிந்துள்ளது. மைத்திரி கட்சி தொடர நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் சர்வதேச விசாரணை தேவையில்லை உள்ளக விசாரணையே போதும் மைத்திரியைக் காப்பாற்ற துணிந்த கூட்டமைப்பினருக்குப் புரியவில்லை. செந்தூரனின் பெற்றோரின் புத்திரயோகமும் புரியப்போவதில்லை. இவர்களுக்கு ஏன் வாக்களித்த எமது மக்களுக்குப் புரியவில்லை. புரியாத புதிராகவே தமிழரின் வாழ்வும் அவலமும் தொடர்கிறது.

இவர்கள் மீண்டும் அரசியல் புரிய மக்களிடம் வருவார்கள். கூடவே அரசியல் கைதிகள் தொடர்பாக ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதிகளின் நிழல்பிரதியும் கொண்டு வருவார்கள். தமிழ் மக்களின் மறதி மீது அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. "அரசியல் கைதிகளின் இதயம் அநேகமாகக் கல்லால் ஆனது. தேற்றப்படவியலாத் தாய்மாரின் துக்கம் அதைக் கரைப்பதில்லை. ஆனால் அன்னையரின் கண்ணீரை வாக்குகளாக மாற்றும் ரசவாதம் அவர்களுக்குத் தெரியும் என்ற ஒரு ஆய்வாளரின் கூற்றுத் தான் நினைவுக்கு வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் 82

# பதற்றம்

(வி, என், சந்திரகாந்தி)





ஆங்கிலத்தில் 'டென்ஷன்' (Tension) என்று ஒரு சொல் இருக்கின்றது. அந்த சொல்லைப்பயன்படுத்தாதவர்களே இல்லை. அந்த ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லை மனத்தளவிலாயினும் எவரும் அறிந்திரு - க்கவும் மாட்டார். ஆனால் 'என்னடா மச்சான்'டென்ஷனாய்'இருக்கிறாய்? என்று -ம்' அவன் சரியான 'டென்ஷன்' காரன் என்றும் சதாரணமாக விளாசிவிடுவார்கள்' சரி., 'லிவ்கோ' ஆங்கில அகராதியை தட்டிப்பார்த்தால்... இழு(க்கும்)விசை ,இழுத்துக்கட்டுதல், இழுத்தல் என்றும் இறுக்கம்,மோதல், பிகுத்தன்மை, கெடுபிடி நிலை,அடக்கிவைத்த மனஸ்தாபம், தீவிர கருத்து வேற்றுமை என்றும் பொருள் விளக்கம் தருகின்றது. ஆனால் நாம் பேச்சு வாக்கில் பயன்படுத்தும் அ்ளவில் எமது வசனங்கள் அனைத்திற்கும் இணையான ஒரே சொல் எதுவாக இருக்கலாம் என்று துருவி ஆராய்ந்ததில் 'பதற்றம்' என்ற சொல் நன்கு பொருந்தி வருவதாக தெரிகின்றது. 'என்னடா மச்சான் பதற்றமாய் இருக்கிறாய்','அவன் சரியான பதற்றக்காரன்' என்ற வாக்கியங் -களில் முன் கூறப்பட்ட வாக்கியங்களின் அ்ர்த்தம் நன்கு தொனிக்கின்றது.

உண்மையில் பதற்றம் என்பது ஒரு விசையாகும். நாமும் எமது வாழ்கையும் அந்த விசைக்கு உட்பட்டே காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கின்றோம். ஒரு குழந்தை தனித்து விடப்படுகின்றது. அம்மாவையோ அல்லது தனக்கு அறிமுகமானவரையோ தேடுகின்றது. எவரும் தென்படவில்லை உடனே பதற்றம் அடைகின்றது. அந்த பதற்றம் வாழ்கைக்கு அத்தியாவசியமாகின்றது. குழந்தை தனது பாதுகாப்பை உறுதிசெய்ய முயல்கின்றது. வீரிட்டு அழுகின்றது. யாராவது குழந்தை அருகே ஓடிவந்து அதனைதூக்கி அரவணைத்துக்- கொள்கின்றார்கள்.அதனது பதற்றம் சிறி- து சிறிதாக தணிகின்றது.

வளர்ந்தவர்கள் கூட புதிய இடங்களில் புதியவர்களுக்கு அறிமுகமாகும் போது சிறிது பதற்றம் அடையவே செய்கின்றனர். எமது தோற்றம், நடத்தை, பங்களிப்பு ஆகியன அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்று அடி மனம் தடுமாறும்போது பதற்றமும் உண்டாகவே செய்கின்றது. அதனை அவதானம் என்று கொள்ளவேண்டும். ஒரு சபையில் கூட்டத்தில் நாம் உரையாற்றிக் கொண் - டிருக்கின்றோம். தொடக்கத்தில் சிறிது பதற்றம் இருந்தாலும் சபையோர் கைதட்டி எமக்கு உற்சாகம் அளித்தால் எமது பதற்றம் பறந்துவிடும். பயஉணர்வு பதற்றத்திற்கு பிரதான காரணியாக இருக்கின்றது. பலர் இருட்டிற்கு பயப்படுகின்றார்கள். பேய், பிசாசு என்று இல்லாத வற்றிற்கெல்லாம் கற்பனை செய்து கொண்டு பதற்றம் அடைவார்கள். யன்னல் சேலையை விலக்கிக்கொண்டு வரும் கடும் காற்று, விசித்திர ஒலிகள், பொருள்கள் தூக்கி வீசப்படுதல், எல்லாமே அவர்களை பதற்றம் அடைய வைத்துவிடும். சொல்லப்- போனால் உண்மையான காரணம் எதுவுமே கிடையாது. மனபிரமை தான்!

மனம் பலவீனமானவர்களை தான் பதற்றம் அதிக அளவில் பாதிக்கின்றது. ஒரு சாதாரண உந்துருளி விபத்து பயணித்தவர் களையும்பாதிக்கப்பட்டவர்களையும் பதற்றமடையச் செய்ய போதுமானது.! நாட்டில் நடக்கும் விபத்துக்களை எடுத்தால் அவை மிகவும் திகிலூட்டுவனவாக பார்பவர்களை திகில் கொள்ள வைக்கும் அளவில் இருக்கின்றன.உயிராபத்துக்களு- ம் பெருமளவில் ஏற்படுகின்றன. தெருவில் இரத்தஆறு ஓடுவதை பார்த்துக் கொண்டு பதற்றம் அடையாமல் இருக்க யாரால் தான் முடியும்?

குழாய் கிணறில் விழுந்துவிட்ட குழந்தையை காப்பாற்றுவதற்கு மீட்பு பணியாளர் மேற்கொள்ளும் முயற்சிகளை அவதானித்துக் கொண்டு நிற்பவர்களால் பதற்றமடையாதிருக்க முடியுமா? வெள்ளத்- தில் பயணிகளுடன் சிக்குண்ட பேருந்து அடித்துச்செல்லப்படுகையில் உண்டாகும் பயங்கர அனுபவத்தை பார்த்துக்கொண்டு பதற்றமடையாமல் இருக்க முடியுமா? பயணிப்பவர்களின்அவலக்குரல், ஓலம், செ -விப்புலனை விட்டு மறைய எத்தனை நாட்கள் எடுக்கும்.?

விபத்துக்களை எடுத்தால் அவை எம்மால் சம்பாதிக்கப்படுபவை. ஆனால் இயற்கை அனர்த்தங்கள் எமது கட்டுப்பாட்டை மீறியவை. புயல், நிலநடுக்கம், சுனாமி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு எல்லாமே மனித உயிர்களை பெருமளவில் காவுகொள்ளக்கூடியன.

2004ல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இந்தோனேசியா, இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை உள்ளிட்டபத்திற்கும் மேற்பட்ட நாடுகள் பெரும் பொருள் இழப்புக்களையும் இலட்சக் -கணக்கில் உயிரிழப்புக்களையும் அனுபவித்தன. அந்த அனுபவம் தந்த பாடம வானொலியில்... தொலைக்- காட்சியில் அல்லது நேரடியாக ஒலிபெருக்கியில் கடற்கோள் எச்சரிக்கையாக விடுக்கப்படும் போது எமது மனம் பதற்றமடையத்தானே செய்யும்! இன்று உலகம் யுத்த பூமியாக மாறிவிட்டது. எந்த நாட்டை எடுத்தாலும் உள்நாட்டு போர்... தீவிரவாதமுறை, பகைநாட்டு அச்சுறுத்தல் என்பனவற்றில் ஏதாவது ஒன்று இல்லாமலிருக்கின்றதா? எந்த நாட்டில் மக்கள் அமைதியாக வாழமுடிகின்றது? வான் தாக்குதல்கள், செல்வீச்சுக்கள், தற்கொலை குண்டுதாரிகளின் தாக்குதல்கள் என்று அச்சம் மேலும் மேலும் விரிவடைகின்றனவே தவிர அமைத்தி - க்கான சூழல் எங்காவது தெரிகின்றதா? உலகில் அகதிகள் தொகை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அவற்றிற்கெல்லாம் காரணம் யுத்தம் காரணமாக மக்களுக்கு உண்டான பதற்றமே அல்லவா? பெரும் ஜனநாயக நாடுகள் போரினால் பாதிக்கப்பட்ட அகதிகளை ஏற்க தயாராக இல்லை. தமது சொந்த மண்ணில் இருக்க முடியாமலும் தஞ்சம் புகுந்த நாட்டில் அடைக்கலம் கிடைக்கபெறாமலும் சாப்பாடு, உடுதுணி, தங்குமிடம் மற்றும் அத்தியாவசிய தேவைகளை இழந்து நிற்கும் மக்களின் பதற்றத்தை அனுபவித்து பார்த்தாலே தாக்கத்தை புரிந்துகொள்ள முடியும்.

பயம் கோபத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்த கூடிய உணர்வாகும். மக்களில் அனேகம் பேர் கோபம் கொள்வதை தமது இயல்பாக கொண்டவர்களே. பெற்றோர் பிள்ளைகள் மீதும். ஆசிரியர் மாணவர்மீதும், கணவன் மனைவிமீதும் ,அதிகாரி தொழிலாளிமீதும் ஏதேச்சை - யாகவே கோபம் கொள்கின்றார்கள். அதனால்பிள்ளைகளும் மாணவர்களும் மனைவியரும்தொழிலாளர்களும் அனா வசிய பதற்றத்திற்கு உள்ளாகின்றார்க -ள். கோபத்திற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

நாம் எவர்மீது அதிகளவு அன்பு பூண்டுள்ளோமோஅவர்கள் தமக்கு நன்மை பயக்காத பாதையில் சென்றால் எமக்கு கோபம் உண்டாகி ன்றது. அது நன்மை நிமித்தமானது. ஆனால் கோபத்திற்கு பிரதான காரணம் பகைமையேயாகும்.இன்றுதனி நபர்களுக்கிடையேயான பகைமை கோபத்திற்கும் அதன் நிமித்தமான வன்முறை பழிவாங்கல் பதற்றம், எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கின்றது.

இனி, நாம் எப்போதும் சுமுகமான வாழ்கையையே எமது இலட்சியமாக கொண்டிருப்போம். அதற்கே தாவது இடையூறு உண்டா -னால் பதற்றத்திற்கு ஆளாகுவோம். நாம் செய்யும் தொழிலே எமது வாழ்வுக்கான ஆதாரம்.அந்த தொழிலில் எமது பொறுப்புக்கள் அதிகரிக்கப்பட்டால். எமக்குபதற்றம் உண்டாக இடமுண்டு. தொழில் உட்பட எமது வாழ்கையின் அம்சங்களிலும் பிறரிடமிருந்து எதிர்ப்பு கிளம்பினால் அது எம்மை பாதிக்கும்.

எமக்கெதிராக எவராவது பொய் வழக்குகளை கூடபதிவு செய்யலாம். அந்நேரங்களில் எல்லாம் நாம் நிரபராதி... எதற்காக பயப்பட வேண்டும். என்று தைரியமாக இருக்க மாட்டோம். பதிலுக்கு பதற்றமடையவே செய்வோம்.

இனி எமது இயல்பு வாழ்கையில் நாம் பெற்றோர்,சகோதரங்கள்,மனைவி, பிள்ளைகள், என்று அன்பு வைத்து பழகும் பலர் இருப்பார் - கள். எவருக்கும் மரணம் சம்பவிக்கும் என்பது நியதியாகும். அப்படி எம்மவர் எவராவது உயிரிழக்கும் நிலை ஏற்படபோகின்றது என்ற கட்டம் வந்தாலே எம்மை பதற்றம் பற்றிக்கொள்ளும்.

நாம் மட்டும் எந்த இக்கட்டான நிலைமைக்கும் விதிவிலக்கானவர்கள் அல்ல. ஒரு குறிப்பிட்ட வயதெல்லைக்கு மேல் உடல் சோர்ந்து விடுகின்றது. மன ஓ்மம் அற்றுப்போகின்றது. நோய்கள் ஒவ்வொன்றாக பற்றிக்கொள்கின்றன. தொடர்ந்துபரிகாரம் பெறவேண்டி ஏற்படுகின்றது. உலகில்பலவித தீராத நோய்கள் இருக்கின்றன. மருத்துவஆய்வில் அப்படி ஒரு நோய் இருப்பதாககண்டுபிடிக்கப்பட்டால் பதற்றம் பற்றி கேட்கவேண்டியதில்லை. .

இணையத்தில்'ரென்ஷன்'எனப்படுவது இழுக்கும் விசை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அளவிடும் முறைபற்றியும் படத்துடன் விளக்கி - யுள்ளார்கள்.

வாழ்கையில் பதற்றம் அளவுடன் இருப்பது நல்லது. அது ஒரு எச்சரிக்கை உணர்வாகும். அதுவே அளவிற்கு மிஞ்சினால் எமக்கு ஆபத்தாகவும் முடிந்து விடும்.

எனது சகோதரி ஒருத்தியின் மகனுக்கு தொடர்ந்து காய்ச்சல் இருந்துகொண்டிருந்தது. அவரை இரத்த பரிசோதனைக்கு உட்படுத்திய போது.'பன்றிக்காய்ச்சலுக்கான' அறிகுறி தென்படுவதாகபரிசோதனை அறிக்கை கூறியது. அதைதெரிந்துகொண்டதும். மகன்பதற்றமடை - ந்து மயங்கிவிழுந்தான். மகன் மயங்கி விழுந்ததை கண்ணுற்ற தாயார் தானும் பதற்றமடைந்து மயங்கி விழுந்தார்!

எதற்கும் நாம் தான் பதற்றம் பற்றி எச்சரிக்கை - யாக இருக்க வேண்டும்!

# "இந்தக் கோழியை கூட்டாக்கினால் என்ன??"




**தி**ருகோணமலையில் மத்திய வீதிப் பகுதியில் இடம்பெற்ற ஓர் நிகழ்வு...

அங்குள்ள ஓர் வீட்டில் 66 வயது மதிக்கதக்க ஒரு முதியவரும் இரு பேரப் பிள்ளைகளும் அவளுடைய மகளும் வசித்து வந்தனர். வழமையாக முற்றம் பெறுக்குவது மூத்த பேரப்பிள்ளையின் கடமையாகும்.

அன்றும் அவள் முற்றம் பெறுக்கிக் கொண்டிருந்த வேலையில் ஒரு வெள்ளை நிற முட்டை ஒன்றைக் கண்டவுடன் தனது பாட்டி ஏதாவது முட்டை, தேசிக்காய் காணப்பட்டால் கையால் தொடக்கூடாது தன்னிடம் உடன் வந்து கூறவேண்டுமென உரைத்திருந்தமை ஞாபகத்திற்கு வர ஓடிச்சென்று தன் பாட்டியிடம் கண்டதைக் கூறினாள்.

விடியற்காலை பரபரப்பாக காலை உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பாட்டி அனைத்தையும் அப்பப்படியே போட்டவளாக அவ்விடம் நோக்கி விரைந்தாள் பின் தன் கையில் அவ்முட்டை படாதவாறு விளக்குமாற்றில் அதனை எடுத்துக்கொண்டு முச்சந்திக்கு சென்று அப்படியே போட்டு விட்டு திரும்பினார் திரும்பிய போது தனது ஆருயிர் சிநேகிதியின் குரலில் தனது பெயரை அது உச்சரித்தது ஒரு செக்கனில் நிலைகுலைந்த அவர் பின்னால் திரும்ப முற்பட்ட வேலையில் பலத்த காற்றொன்று தனது கன்னத்தை உரசிச் சென்றதை உணர்ந்தார் அது தன்னை பின் தொடர்ந்து வராமலிருக்க தகாத வார்த்தைகளுடன் உமிழ்ந்து விட்டு பின்னால் திரும்பி பாராது வீடு சென்றாள். வெளியில் நின்றவாரே கை கால் முகம் அலம்பி வீட்டிற்குள் நுழைந்து திருநீற்று பட்டையை நெற்றியில் இட்டுக் கொண்டார்.

பின்னர் நடந்தவற்றை தனது மகனிடம் ஒன்று விடாமல் ஒப்புவித்தார். அதனை கேட்டதும் ஆரம்பத்தில் கிட்டல் செய்த மகன் பின்னர் தாயாரின் புலம்பலைக் கேட்டு கிட்டல் அடித்ததை நிறுத்திக் கொண்டார்.

பின்னர் அனைவரும் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி நாளாந்த வேலையில் ஈடுபட்டனர். அன்றிரவு இரவு ஆகாரத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்த போதும் காலையில் நடைபெற்ற சம்பவத்தை நினைவு கூற பாட்டி மறக்கவில்லை.

மறுநாள் பொழுது புலர்ந்தது வழமைபோல் பேத்தியார் முற்றம் பெருக்க சென்றார் பெருக்க தொடங்கும் முன்னர் சுற்றும் முற்றும் பார்த்த காண்களுக்கு இன்றும் அதே இடத்தில் முட்டை இருப்பது தென்பட்டது.

ஆனால் இன்றோ முட்டை கோழி எச்சத்துடன் சேர்ந்து கிடந்தது பாட்டியிடம் சென்று கூறினால் நேற்றுப் போல் இன்றும் பயந்து விடுவாள் என்ற அச்சம் பேத்திக்கு ஏற்பட்டது. எவ்வாறாயினும் கூறத்தானே வேண்டும். விடயமறிந்த பாட்டி உடன் அங்கு வந்து பார்த்த வேலையில் இது எப்படி சாத்தியம் என எண்ணினாள்.

மீண்டும் நேற்றைப் போல் அவ் முட்டையை மிகவும் கவனாமக எடுத்துச் சென்று வீடுதிரும்பினாள்.

பாட்டிக்கு இந்த நாள் முழுதும் தொடர் யோசனையாக இருந்தது. இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கும் இவ் வீட்டிற்கு எப்படியெல்லாம் செய்ய தேனுகின்றதோ! தெரியவில்லையே? என தனக்குள்ளே கேட்டவுாறு புலம்பிக் கொண்டிருந்தார் பாட்டி ஆனால் இது குறித்து கலந்தாலோசிக்க முடியவில்லை

மறுநாள் பொழுது புலர்ந்ததும் தானே முற்றத்திற்கு சென்று சுற்றும் முற்றும் தேடிப் பார்த்தாள் **ஆகா.......!** இன்றும் அதே இடத்தில் **கோழி** எச்சத்துடன் கோழியின் இறகு **ஒன்றும்** சேர்ந்து முட்டையுடன் காணப்பட்டது சிறிதும் தயங்காமல் பக்கத்து வீட்டு மாமியை அழைத்து உனது கோழி.........

வெட்கிப் புன்முறுவலுடன் உள் நுழைந்த பாட்டியை வரவேற்ற தந்தை மகள்மார் நடந்ததை அறிந்து அன்று முழுதும் வாட்டி எடுத்தனர் அப்பாட்டியை.

நடந்தது யாதெனில் பக்கத்து வீட்டு கோழி இவர்களது வீட்டு வளவினுள் முட்டையிட்டு சென்றுள்ளது. இதற்கு இத்தனை ஆர்ப்பாட்டமா??? ***( தன்யா )***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமுரசு

# திரை விமர்சனம்

# இஞ்சி இடுப்பழகி

மணி.ஜி இயக்கத்தில் வெளியான "144" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



பிரகாஷ் கோவெலமுடி இயக்கத்தில்



ஆர்யா, அனுஷ்கா நடிக்கும்



## ஜீவா ஜோடியாக லட்சுமிமேனன்

ஜீவா தற்போது நயன்தாராவுடன் திருநாள் என்ற படத்தில் நடித்து வருகிறார். அடுத்து 'போக்கிரி ராஜா' படத்தில் இவரது ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார். 'கவலை வேண்டாம்' படத்தில் ஜீவா ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்து வருகிறார்.

இதன் படப்பிடிப்புகள் முடிவடையும் நிலையில் உள்ளது. இந்த படங்கள் விரைவில் ரிலீஸ் ஆக இருக்கின்றன. இந்த நிலையில் அறிமுக இயக்குனர் முத்துக்குமார் இயக்கத்தில் 'ஜெமினி கணேசன்' என்ற படம் தயாராகிறது. இதிலும் ஜீவா நடிக்கிறார். இந்த படத்தில் இவரது ஜோடியாக லட்சுமி மேனன் நடிக்கிறார்.

## யார் மீது கோபமோ?

சமீப காலமாகவே சமந்தா, நெருப்பாக இருக்கிறார். சமீபத்தில் தன் "மாஜி" காதலர் சித்தார்த்தை டுவிட்டரில் வறுத்தெடுத்த சமந்தா இப்போது சக நடிகையர் மீது தன் ஆக்ஷன் அவதாரத்தை துவக்கியுள்ளார்.

திரைப்படத் துறையினரோ, "இந்த பொண்ணுக்கு யார் மீது கோபம் என தெரியவில்லையே"என மண்டை காய்ந்து போயுள்ளனர். இது ஒரு பக்கம் இருந்தாலும், தமிழில் கிட்டத்தட்ட நம்பர் ஒன் இடத்தை எட்டிப் பிடித்துள்ளார் சமந்தா. தனுஷ்டன் தங்க மகன், சூர்யாவுடன் 24, விஜயுடன் தெறி, என முன்னணி நடிகர்களின் படங்களை வசப்படுத்தி சக நடிகையரை கதறடித்து வருகிறார்.

அப்பா இல்லாத அனுஷ்கா, அம்மா ஊர்வசியின் அரவணைப்பில் வளர்கிறார். இவர் குண்டாக இருப்பதால் வரன் அமையாமல் இருக்கிறது. இந்நிலையில்- அனுஷ்காவை பெண் பார்க்க வருகிறார் ஆர்யா. இருவருக்குமே இந்த கல்யாணத்தில் இஷ்டமில்லாததால் சமாதானமாக பேசி பிரிகிறார்கள்.

அதன்பிறகு அனுஷ்கா ஆர்யாவை அடிக்கடி சந்திக்க நேருகிறது. இதனால் இருவருக்கும் நட்பு மலர்கிறது. இந்த நட்பு நாளடைவில் அனுஷ்காவிற்கு காதலாக மாறுகிறது. தன் காதலை ஆர்யாவிடம் சொல்ல வரும் நிலையில் ஆர்யா மற்றொரு பெண்ணை காதலிப்பது தெரிந்து அதிர்ச்சியாகிறார்.

குண்டாக இருப்பதால்தான் ஏதும் கைகூட வில்லை என்று வருந்தும் அனுஷ்கா, பிரகாஷ்ராஜ் நடத்தும் சைஸ் ஜீரோ மூலம் உடல் எடையை குறைக்கும் முயற்சியில் இறங்குகிறார். ஆனால் சைஸ் ஜீரோ மூலம் அனுஷ்காவின் தோழியின் உடல் பாதிக்கப்படுகிறது. இதனால், பிரகாஷ் ராஜ்க்கு எதிராக போராடுகிறார். இந்த போராட்டத்திற்கு ஆர்யாவும் உதவுகிறார். நாளடைவில் ஆர்யாவிற்கு அனுஷ்கா மீது காதல் வருகிறது.

இந்நிலையில், வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் அனுஷ்காவை திருமணம் செய்ய முயற்சி செய்கிறார். இறுதியில் ஆர்யா, அனுஷ்கா இருவரும் ஒன்று சேர்ந்தார்களா? பிரகாஷ் ராஜ் சைஸ் ஜீரோ போராட்டத்தில் யார் வென்றது? என்பதே படத்தின் மீதிக்கதை.

மொத்தத்தில் இஞ்சி இடுப்பழகி சுமாரான அழகி.

# நமீதா

தமிழ் பட உலகில் முன்னணி நடிகையாக இருந்த நமீதா நீண்ட நாட்களாக தமிழ் பட வாய்ப்பு இல்லாமல் இருந்து வந்தார். சமீபத்தில் உடல் எடையை குறைத்த நமீதா மலையாள படம் ஒன்றில் மம்முட்டியுடன் நடித்து வருகிறார். தமிழ் படங்களில் நடிக்கவும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். இப்போது, பிரபு முக்கிய வேடத்தில் நடிக்கும் மீன் குழம்பும் மண் பானையும் படத்தில் நமீதாவுக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதில் வெளிநாட்டு பெண்ணாக வரும் நமீதா பின்னர் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் பாரம்பரியத்தின் பெருமைகளை உணர்ந்து தமிழ் கலாசாரத்தை நேசிப்பது போன்ற வேடத்தில் நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழ் படத்தில் நடிப்பதால் நமீதா மகிழ்ச்சியில் உள்ளார்.

## தல, தளபதியை இயக்க நினைக்கும் சங்கர்

தமிழ் சினிமா வரலாற்றில் மிகப்பெரிய ஆச்சரியம், தற்போது விஜய் நடித்த தெறி படம்சில மாதங்களில் வெளிவர உள்ளன.

இதேபோல் அஜித்தின் வேதாளம் திரைப்படமும் கடந்த தீபாவளி அன்று வெளிவந்து மாபெரும் வரவேற்பு பெற்று திரையில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இது தான் சரியான சந்தர்ப்பம் எனவே டைரக்டர் சங்கர், அவர்கள் அஜித் மற்றும் விஜய் வைத்து இயக்க வேண்டும் என வெகு நாட்களாக நினைத்து கொண்டிருக்கிறார்.

விஜய் 62 வது படம் மற்றும் அஜித் அடுத்த படம் அல்லது அதற்கு அடுத்த படம் சங்கர் இயக்க அதிகபட்ச வாய்ப்புகள் உள்ளன என தமிழ் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு விஜய், அஜித் தரப்பிரல் ஆதரவு வந்திருப்பதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனவே விஜய், அஜித் ரசிகர்களுக்கு மிகப்பெரிய விருந்து காத்து கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்


INFOMATION TECHNOLOGY

## ரோபோக்களின் ஆக்கிரமிப்பு

OTHER

அனைத்து துறைகளையும் ஆக்கிரமித்து வரும் கணினிகள் போன்றே ரோபோக்களும் அனைத்து துறைகளையும் ஆக்கிரமித்துவருகின்றன. இதற்கிணங்க விமான நிலையங்களில் பயணிகளுக்கு உதவிகள் வழங்குவதன் மூலம் விமானங்களை தவற விடுவதை தவிப்பதற்கு ரோபோக்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இந்த ரோபோவிற்கு Spencer எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், பல மொழிகளை விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் வடிவமைப்பில் ஐந்து ஐரோப்பிய நாடுகளைச்-சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும், வியாபார நிறுவனங்களும் பங்குவகிக்கின்றன. இதனை பரீட்சார்த்தமாக முதன் முதலாக ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்த ரோபோ பரிசோதனை இங்கிலாந்தின் ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்தில் கடந்த ஒரு வாரமாக நடத்தப்பட்டது, வருகிற சில மாதங்களில் இறுதி பரிசோதனை நடத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.




MOBILE

## Li Fi தொழில் நுட்பம்

இணையத்தள இணைப்பை வயர் இல்லாமல் பயன்படுத்துவதற்காக 'Wi-Fi' என்ற தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இதை பயன்படுத்தி குறிப்பிட்ட தூரம் வரை கணினி, கையடக்கத் தொலைப்பேசி, மடிக் கணினி போன்ற சாதனங்களில் இணையத்தள வசதிகளை பெற முடியும். தற்போது 'Wi-Fi' வை விட 100 மடங்கு வேகம் கொண்ட தொழில்நுட்பத்தை எஸ்டோனியா நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதற்கு 'Li-Fi' என்று பெயரிடப்பட்டுள்ளது. 'Wi-Fi' இல் 1 ஜி.பி தகவல்களை பதிவிறக்கம் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ அதை விட 100 இல் 1 மடங்குதான் 'Li-Fi' நேரம் எடுத்துக் கொள்கிறது. தகவல் தொழில் நுட்பத்தில் 'Li-Fi' புதிய புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சோடியம் அயன் மின்கலம் கண்டுபிடிப்பு



சம காலத்தில் மொபைல் சாதனங்கள் உட்பட பல்வேறு சாதனங்-களிலும் இலித்தியம் அயன் மின்கலங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
இந்நிலையில் சோடியம் அயனைக் கொண்ட மின்கலத்தினை பிரான்ஸிலுள்ள விஞ்ஞானிகள் குழு ஒன்று முதன் முறையாக உருவாக்கியுள்ளது.
இதனை லேப்டொப்களிலும், LED Flash மின்கலங்களை ஒளிர வைப்பதற்கும், Tesla Model S கார்களிலும் பயன்படுத்தக்கூடிய மின்கல மாதிரியினை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்து பாவனை செய்யக்கூடியதாகவும், இவ்வாறு சார்ஜ் செய்யும்போது ஒரு எலக்ட்ரோட்டிலுள்ள அயன்கள் மற்றைய எலக்ட்ரோட்டிற்கு திரவம் ஒன்றின் ஊடாக பயணம் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது.

## Nintendo புதிய ஹேம் அறிமுகம்

வீடியோ ஹேம் வடிவமைப்பு நிறுவனமான Nintendo அடுத்த மாதம் புத்தம் புதிய வீடியோ ஹேம் ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுத்துள்ளது.
Fast Racing NEO எனும் இக் ஹேமானது முன்னைய சேசிங் ஹேம்களை விடவும் வேகமாக செயற்படக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இக் ஹேம் தொடர்பான ட்ரைலர் ஒன்று வெளியிடப்பட்ட போதிலும், மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை.

எனினும் ஹேம் பிரியர்களை வெகுவாகக் கவரக்கூடிய வகையில் காணப்படும் இக் ஹேம் தொடர்பான மேலதிக தகவல்கள் எதிர்வரும் வாரங்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## உப்பு நீரில் எரியும் விளக்கு கண்டுபிடிப்பு

உப்பு நீரைப் பயன்படுத்தி விளக்குகளை எரியச் செய்து புரட்சிகர கண்டுபிடிப்பொன்றை பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர் அயிசா மிஜினோ நிகழ்த்தியிருக்கின்றார். சூழலுக்கு பாதிப்பற்ற இந்த கண்டுபிடிப்பானது கடற்கரை பகுதிகளில் வாழும் மக்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தேநீர் கோப்பையில் 2 கரண்டி உப்பைச் சேர்த்து அதனுடன் சில இரசாயனங்களை உள்ளிட்டு அதிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதில் இருந்து பெறப்படும் மின்சார வெளிச்சம் 8 மணி நேரத்திற்கு போதுமானதாகவும் மண்ணெண்ணெய், மின் விளக்குகளைவிட சிக்கனமானதாகவும் உள்ளது.
இந்த உப்பு விளக்கிற்கு சர்வதேச அங்கீகாரமும் கிடைத்துள்ளது.



## வேற்று கிரகத்தில் இருந்து வந்த சமிக்ஞை

வேற்றுகிரக வாசிகள் இருக்கிறார்களா இருந்தால் அவர்கள் எப்படி இருப்பார்கள்? நம்மை போன்று இருப்பார்களா அல்லது சினிமாவில் காட்டப்படும் உருவங்களில் இருப்பார்களா? இது போன்ற எண்ணற்ற கேள்விகள் நம் மனதில் எழுவது உணடு. வேற்று கிரகவாசிகள் உள்ளார்களா என்ற கேள்விக்கு பெரும்பாலான விஞ்ஞானிகள் ஆம் என்றே பதில் கூறுகிறார்கள்.
இன்னும் 25 ஆண்டுகளில் நாம் அவர்களை நேரில் சந்திக்கலாம் எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்



## மின்குமிழ்களால் Wi-Fi வலையமைப்பு பாதிப்பு

தற்போது அனைத்துவகையான மொபைல் சாதனங்களிலும் Wi-Fi தொழில் நுட்பம் உள்ளடக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் ஏனைய வயர்லெஸ் தொழில்நுட்பங்களை விடவும் நீண்ட தூரத்திற்கு வலையமைப்பு ஏற்படுத்த முடியுவதுடன், வேகமாகவும் தரவுகளைப் பரிமாற்றம் செய்ய முடியும்.
இதன் காரணமாக வயர்லெஸ் இணைய தொழில்நுட்பங்களிலேயே இந்த றுசை-குசை தொழில்நுட்பம் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.
எனினும் இத் தொழில்நுட்பத்திற்கு மின்குமிழ்களின் வெளிச்சம் பாதகமாக அமைவதாக தற்போது அதிர்ச்சி தகவல் ஒன்று-வெளியாகியுள்ளது.
கிஸ்துமஸ் காலத்தில் அதிகளவில் மேற்கொள்ளப்படும் மின்குமிழ் அலங்காரங்களைக் கருத்தில் கொண்டே இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
இதனை பிரித்தானியாவின் திறந்த பல்கலைக்கழகம் ஒன்றில் பணியாற்றுபவரானஅன்றூ ஸ்மித்த என்பவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.
இதற்கு காரணம் ஒளி அலைகளின் குறுக்கீடு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## YouTube Red தரும் வரப்பிரசாதங்கள்

உலகின் முன்னணி வீடியோ பகிரும் தளமாக விளங்கும் யூடியூப் அண்மையில் விளம்பரங்கள் இன்றி வீடியோக்களை பார்த்து மகிழக்கூடிய சந்தா சேவையினைஅறிமுகம் செய்திருந்தமை அறிந்ததே.
யூடியூப் ரெட் எனும் இச் சேவையினை தற்போது விரிவுபடுத்த அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதன்படி இச் சேவையின் ஊடாக திரைப்படங்களை கண்டுமகிழ்தல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல் போன்றவற்றினையும் பயனர்களுக்காக வழங்க முன்வந்துள்ளது. அதாவது Netflix மற்றும் Amazon தளங்கள் தரும் வீடியோ சேவை போன்றதொரு சேவையை தருவதற்கு கூகுள் மற்றும் யூடியூப் நிறுவனங்கள் இணைந்து முடிவெடுத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்களில் பயணங்கள்

சிறுகதை

## -- நனைந்த நதி --

கனகரட்ணம்க்கு அன்று மனநிலை ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது! அவனுக்கிருந்த ஒரே சொத்து அதுதான். ஆம் பனைமரங்களடங்கிய அவனுடைய சின்ன புஞ்சை நிலம் மட்டும் தான். அரசு நூற்பாலைக்கு இடம் போதவில்லையாதலால் அதை கையகப்படுத்து -வதற்கு அதிகாரிகள் முயற்சி செய்வதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! தடுக்கவும் முடியவில்லை! நேற்று நடந்த சம்பவம் அவன் கண்முன்னே வந்து நின்றது! நினைக்க நினைக்க வயிற்றைக் கலக்கியது.

"ஏம்பா மாடசாமி! உனக்கு வேறு நிலம் எதனாச்சும் இருக்கா"? - தாசில்தாரின் கனிவாக பேச்சு அவனைப் பதமாக பதில் தர ஏதுவாயிற்று.

"ஐயா! இந்தப் புஞ்சைக் காடு தவிர, உள்ளங்கையளவுக்கு ஒரு எழுபது செண்டு நஞ்சை நிலம் மட்டும் உள்ளது. அதில் கெடைக்கும் நெல்லை வைத்துத்தான் அரைவயிற்றுக் கஞ்சி குடிக்கிறோம்."

அது சரிப்பா! இந்தப் புஞ்சைக்காட்டிலே எல்லாமே பனைமரங்கள் தானே நிக்குது! இதிலே நெல் விளையாதுல்ல"

"இந்தப் பனைமரங்களாலேதான் சாமி என் குடும்பம் அன்றாட அரைவயிற்றுக் கஞ்சி குடிச்சிக்கிட்டிருக்கோம்."

"அதென்னப்பா! இதை வச்சி கஞ்சி குடிச்சுக்கிட்டிருக்கம்னு சொல்றே."

"ஆமா ஐயா! வரு'த்துக்கு இரண்டு முறை ஓலை வெட்டி ஆயிரம், ஐநூறுக்கு வித்துடுவேன். அதில் உள்ள மட்டையில் நார் உறித்து தும்புக் கயிறு திரித்து நூறு, இருநூறுக்கு சந்தையிலே கொண்டு போய் வித்துடுவேன் நுங்கு சீசன்லே நுங்குகளை பட்டை போட்டு அந்த வழியா வர்ற பஸ்லே இருபது முப்பதுக்கு விற்று காசாக்கி, சந்தைச் செலவுக்கு சரி பண்ணிடுவேன் பனங்கொட்டையை பதித்து, அதிலிருந்து எடுக்கும் பனக்கிழங்கை விற்று காசாக்கி வீட்டுச் செலவுக்கு சரி செய்துருவேன். பதனீர் இறக்கி, டவுன்லே கொண்டு போய் விற்று, கைச் செலவுக்கு வைத்துக் கொள்வேன்."

"சரிப்பா! பனை மரத்துக்கு அரசாங்கத்துலே பணம் தருவாங்க."

"எவ்வளவு தரப் போறாங்க மரத்துக்கு இருபதோ, முப்பதோ தருவாங்க. அதுவும் ஒரு தடவை தானே கொடுப்பாங்க."

"ஆமா! மரத்தை வெட்டியாச்சுன்னா இரண்டாவது தடவை எப்படி தருவாங்க."

"ஐயா! வரு'ா வரு'ம் கிடைக்கும் வருமானத்தை ஒரே தடவையில் அழிச்சிடுவீங்க... மறு வரு'த்துலே என் பொழப்பு சீரழிஞ்சு போகும். அப்ப என்னை இந்த அரசாங்கம் காப்பாத்துமுங்களா."

தாசில்தார் பொறுமையிழந்து விட்டார்! "இந்தாப்பா வளவளன்னு பேசாதே! ஊருக்கு பெரிய மில் வந்தா இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கும் உனக்குக் கூட வேலை கிடைக்கும் ஊர் செழிக்கும் பணப் புழக்கம் ஏற்படும். இதையெல்லாம் நினைச்சுப்பாரப்பா."

"ஐயா! என் குடும்ப நிலையையும், எனது வறுமையையும் சொன்னா எடுத்துக்கிறமாட்டீங்க! கோபப்படுறீங்க"


கனகரட்ணத்தின் எப்படி வயப்படுத் - துவது என்பது புரியாமல் தாசில்தார் அந்த இடத்தை விட்டு ஜீப்பில் ஏறி அமர்ந்தார்.

கனகரட்ணத்தின் பனைமரங்கள் உள்ள இடத்தையும் சேர்த்து கையகப்படுத் - தினால்தான் மில் கட்டுவதற்கு இடம் சரியாக இருக்கும் என தீர்மானித்து, அந்த இடத்தை கட்டாயமாக கையகப்படுத்துவதைத் தவிர வேறு வழி அவருக்கு தெரியவில்லை.

மேலப்பட்டி கிராமத்தில் கனகரட்ணத்தை கூலாண்டிக்கு எழுபது செண்டு நஞ்சை நிலமும், எண்பது செண்டு புஞ்சை நிலமான பனந்தோட்டமும் தான் பூர்வீகச் சொத்து. கூலாண்டி பதனீர் இறக்கும் தொழிலாளி. ஐம்பது வருடங்களுக்கு முன் அந்தப் புஞ்சை நிலங்களில் அவன் பனங்கொட்டை -யைப் பதித்திரா விட்டால் இன்று இந்த பனைமரங்கள் கனகரட்ணத்திக்கு கை கொடுத்திருக்காது. கூலாண்டிக்கு ஒரே மகன் கனகரட்ணம். கனகரட்ணத்தை பத்து வயதிலே பனை மரங்கள் ஏறக் கற்றுக்கொடுத்தான். பதநீருக்கு பாளை சீவுவதிலே கனகரட்ணத்தை மிஞ்ச முடியாது. தந்தைக்குப் பின் தனயன், அந்தப் பனைமரங்களைப் பேணிக்காத்து, அதிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தி வந்தான்.

மேலப்பட்டி கிராமத்தில் நூற்பு ஆலை ஏற்படுத்த அரசு திடீரென தீவிரம் காட்டியது. அதுவும் கனகரட்ணத்தின் புஞ்சைப் பனங்காட்டையடுத்துள்ள நிலத்தை அரசு தேர்ந்தெடுத்தது. அரசு சேர்ந்தெடுத்த இடம் போதாது என்று அதிகாரிகள் கூறியதன் விளைவாகத் - தான் கனகரட்ணத்தின் பனங்காட்டின் மீது கை வைக்க ஆரம்பித்தது.

மேலப்பட்டி கிராமத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக இது போன்ற மழையைக்



---

# மீண்டும் ஆரம்பத்தில் இருந்தாஆ ஆ ஆ !!!

சாதாரமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

மனது சரியில்லாததால் இன்றைய நாள் மெதுவாக பலநினைவுகளுடன் கடந்துகொண்டிருந்தது. வாழ்க்கை ஏன் இப்படியானதாய் இருக்கிறது என்று சிந்திக்கவைத்தது மனது. இதே கேள்வி முன்பும் பலதடவைகள் மனதில் தோன்றியிருந்தாலும் இன்று வரை பதில் கிடைத்ததில்லை. இன்றும் அப்படியேதான்.

இளவேனிற்கால விடுமுறை கழிந்து பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளின் ஒலிகள் ஜன்னலினூடாக கேட்டுக்கொண்டிருந்தன. ஆண் பெண் குழந்தைகளின் சிரிப்பலைகள், உரையாடல்கள் என அந்த ஒலிகள் என்னை பல ஆண்டுகளுக்கு முன்னான நாட்களுக்குள் அழைத்துப்போயின.

ஏற்கனவே இருந்த மனச்சோர்வுடன், பழைய நினைவுகளும், தனிமையும் சேர்ந்துகொண்டபோது, இனியும் வீட்டுக்குள் இருப்பது நன்றன்று என்பதால் வெளியில் புறப்பட்டேன்.

எங்கேபோவது என்பதையறியாமல் அரைமணிநேரம் அலைந்து தி□ரிந்தேன். பின்பு ஒரு பெரிய பல்பொருள் அங்காடித்தொகுதியினுள் வாகனத்தை நிறுத்தியபின் அங்கிருந்து கடைகளினுள் புகுந்துகொண்டேன்.

புத்தகக்கடை, கணிணிக்கடை, இலத்திரனியற்பொருட்களை விற்கும்கடை என்று நேரம் கடந்துகொண்டிருந்தது. மனம் எதிலும் லயிக்கும் நிலையில் இருக்கவில்லை. தனிமையுணர்வினை மிக நெருக்கத்தில் உணர்ந்துகொண்டிருந்தேன். ஈரமான உடையுடன் நடப்பதுபோன்றதான உணர்வில் இருந்தது மனது. எதையெதையோ நினைத்தபடி நடந்துகொண்டிருந்தேன்.

எதிரே ஒரு பாதணிக்கடையொன்றில் 50 வீதக்கழிவில் விற்பனை என்றிருந்து. கால்கள் அக்கடையினுள் புகுந்துகொண்டன. ஆண்களின் பாதணிகள், பெண்களின் பாதணிகள்என்பவற்றைக் கடந்தபின் குழந்தைகளின் பாதணிகள் இருக்கும் பகுதியில் பெண்குழந்தைகளின் பகுதி இருந்தது

பாடசாலை ஆரம்பிக்கும் நாட்கள் என்பதால் குழந்தைகளுக்கு பல புதிய புதியவகையான பாதணிகள் விற்பனைக்கு வந்திருந்தன.

சில பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் இரண்டு தேவதைகளுடன் பாதணிகடைகளில் பல மணிநேரங்களை கழித்திருக்கிறேன். பாடசாலைக்கான பாதணி, வெளியே விளையாடுவதற்கான பாதணி,உள்ளே விளையாடுவதற்கான பாதணி, மழைக்கால -த்திற்கான பாதணி, பனிக்காலத்திற்கான பாதணி, விழாக்களுக்கான பாதணி, இளவேனிற்காலத்திற்கான பாதணி இப்படி பல பல சந்தர்ப்பங்களுக்கான பாதணிகள் தேவைப்பட்ட காலமது. இரண்டு இளவரசிகளுடன் பேரசனாய் வாழ்ந்திருந்த நாட்களவை.ஆண் குழந்தைகளுக்கான பாதணிகளின் உலகம் மிகமிகச்சிறியது. பெண்குழந்தைகளின் பாதணிகளின் உலகம் மிகவும் பெரியது, வித்தியாசமானது, அழகானது.ரோசா, ஊதாப்பூ நிறங்கள் முக்கியமானவை. ஆரம்பத்தில் ரோசாநிறமாயும் காலப்போக்கில் ஊதாப்பூவின் நிறத்திலும் என்னவள்களின் பாதணித்தேர்வுகள் இருந்தன.

மழைக்காலத்துப் பாதணி என்றால் அது எவ்வளவு உயரமாய் இருக்கவேண்டும் என்பதில் இருந்து, நிறம், என்னவிதமான படங்கள் அதில் பதிக்கப்பட்டிருக்க வேண்டும்என்பதுவரையில் அவர்களே தீர்மனிப்பார்கள். கடை கடையாக ஏறி இறங்கி ஏதும் வாங்காது வீடுதிரும்பியநாட்களில் அவர்களின் சோகம் என்னையும் பற்றியிருக்கும்.

குழந்தைகளுக்கான பாதணிகள் இருந்த பகுதியில் இருந்த ஒரு பாதணியின் மேற்பகுதியில் பல ஓட்டை -கள் இருந்தன. அந்த ஓட்டைகளை பூக்கள், மிருகங்கள், பறவைகள் போன்ற சிறு சிறு உருவங் -களால் மறைக்கலாம். அவ் உருவங்கள் தனியே விற்பனைசெய்யப்படும். அந்த பாதணியைக்கண்டதும் என் இளையமகள் அப் பாதணிகளுடன் செய்த அழகான அழிச்சாட்டியங்கள் நினைவுக்கு வந்தது.

என் இளையமகளுக்கு அந்தப் பாதணியில் பெருத்த காதலிருந்தது. ரோசா நிறத்தில் அப்படியான பாதணி ஒன்றினை வாங்கிக் கொண்டாள். அதற்கு பல நிறங்களில் பூனை உருவங்கள், குதிரை உருவங்கள் என்று வாங்கிக் கொண்டாள். வீட்டுக்குள்ளும் அதே பாதணிகளுடனேயே திரிந்தாள். யாராவது வீட்டுக்கு வந்தாலும் அதை காட்டுவதற்காவே அப் பாதணிகளை பாவித்தாள். மற்றவர்கள் அவளின் பாதணிகளை ஆச்சர்யமாகப் பார்த்தால் பூரித்துப்போவாள்.

ஒரு முறை லண்டனுக்குச் சென்றிருந்தோம். அந்நாட்களில் அங்கு பாதணியின் கீழ் ஒரு சிறிய சில்லு பூட்டிய பாதணிகள் பெரும் பிரபல்யமாய் இருந்தன. அப்படியான பாதணிகளின் உதவியுடன் வழுக்கி வழுக்கி நடக்கும் குழந்தைகளை பார்த்தபடியே நின்றிருப்பாள் எனது மூத்த மகள். தனக்கும் அது வேண்டும் என்றாள். அவளின் விருப்பத்தை தட்டமுடியுமா? வாங்கிக்கொடுத்தேன். அதன் பின்பு என் கையைப் பிடித்தபடியே வழுக்கி வழுக்கி ஓடப்பழகிக்கொண்டாள். அக்காள் வழுக்கி வழுக்கி ஓடுவதைப்பார்த்த தங்கையும் அடம்பிடித்து அவளுக்கும்அதேமாதிரியான பாதணிகளை வாங்கிக் கொண்டாள். சில நோரங்களில் இருவரும் எனது இருகைகளையும் பிடித்துபடி வழுக்கிக் கொண்டார்கள். அவர்களின் மகிழ்ச்சியில் வழுக்கிக் கொண்டிருந்தேன்,நான்.நோர்வே வந்தபின் அவர்களின் பாதணிக்கு பலத்த மவுசு இருந்தது. காலப்போக்கில் அப்படியான பாதணிகள் நோர்வேக்கு வந்த போது எனது குழந்தைகளுக்கு அந்தச் சப்பாத்தின் மீதான காதல் தொலைந்திருந்தது.


ஒரு முறை பனிக்காலத்தில் உறைபனியில் சறுக்கும் பாதணி வாங்கித்தா என்றாள் மூத்தவள். வாங்கிய பின்"வா,|எங்கள்வீட்டருகில்இருக்கும்குளம் உறைந்து போயிருக்கிறது. அங்கு போய் சறுக்கி விளையாடலாம் என்றாள். சரி போகலாம் என்றேன். சற்று நேரம் அவளைக்கு உதவியிருப்பேன். அதன் பின்பு நீரில் நீந்தும் மின்குஞ்சு போலாகிவிட்டாள். அந்தப்பாதணிகளைப் போடவும், அவற்றை கழட்டவுமே அவளுக்கு உதவி தேவைப்பட்டது. அடுத்தடுத்த வருடங்களில் அவள் உறைபனியில் எப்படி சறுக்குவது என்று தங்கைக்கும் கற்பித்தாள். நான் குளத்தின் கரையில் நின்றபடியே அவர்களை ரசித்துக்கொண்டிருந்தேன்.

ஒரு முறை நத்தார் நாட்களின் போது கடைக்குச் சென்றி -ருந்தோம்.நடக்கும் போது நிறம் நிறமான வெளிச்சமும் கீச் கீச் என்று சத்தமும் வரும் பாதணி ஒன்றினை அணிந்தபடியே ஒரு குழந்தை நடந்துபோனாள். அப்படியான பாதணி வேண்டும் என்று கேட்டு, அழுது வாங்கிக்கொண்டாள் இளையவள். அன்று வீட்டுக்குள்ளும் அதனுடனேயே நடந்து திரிந்தாள். நித்திரையானதும் மெதுவாய் பாதணிகளை கழற்றி வைத்தேன். காலை எழும்பியதும் மீண்டும் அதனைப் போட்டுக்கொண்டாள்.

இளையவளின் முதலாவது பிறந்தநாள் லண்டனில் நடைபெற்றது. அவளுக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கியாகிவிட்டது. ஆனால் விரும்பிய பாதணிகள் மட்டும் கிடைக்கவேயில்லை. மாலை ஆறு மணிக்கு விழா ஆரம்பிக்கவிருந்தது. மதியம் 12 மணிக்கும் பாதணிகள் கிடைக்கவில்லை. இறுதியில் பல மணிநேர காரோட்டத்தின் பின் □பலே□ நடன உடுப்புகள் விற்பனைசெய்யும் ஒரு கடையில்மாலை4மணிபோல் பாதணிகளை வாங்கிக் கொண்டேன்.ஒரு முறை விடுமுறையின் போது கட்டார் நாட்டிற்கு சென்றிருந்தோம். அங்கு பல பல அழகிய பாதணிகள் இருந்தன. வீடுமுறை முடிந்து திரும்பியபோது ஒரு பெட்டி நிறைய பாதணிகள் நோர்வேக்குள் கடத்தப்பட்டன.பாடசாலைக்குச் செல்ல முன்பு □ அப்பா சப்பாத்து ஊத்தையாக இருக்கிறது துடைத்துத் தாருங்கள்□ என்று கட்டளையிடுவார்கள். சுத்தமான பாதணியைப் பார்த்ததும் அவர்களின் கண்களில் தெரியும் அழகுக்காகவே எத்தனை பாதணியையும் கழுவலாம். எனது பாதணிகள் அசுத்தமானவை, அழகில்லாதவை, பழயவை என்றெல்லாம் ஆயிரம் விமர்சனங்கள் வரும். சில வேளைகளில் புதிய பாதணிகளைப் பரிசளித்துமிருக்கிறார்கள். இனி பாதணிகள் வாங்கும் போது என்னை அழைத்துப் போ. உனக்கு அழகியல் பற்றி ஒன்றும் தெரியாது என்று அவர்கள் பாராட்டிய நாட்களும் உண்டு. இன்று அந்த பாதணிக் கடைக்குள் ஒரு பெண்குழந்தை ஒரு சோடிரோசா நிறமான பாதணிகளை தனது காலுக்கு பொருத்தமானவையா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கண்களில் பெருங்கனவு தெரிந்தது, எனக்கு. என்னிடம் எனது இரு குழந்தைகளும் 3, 4 வயதில் பாவித்த ஒரு சோடிப் பாதணிகள் இருக்கின்றன. அவை எனது பொக்கிஷங்கள். சில நேரங்களில் அவற்றை எடுத்து நுகர்ந்து பார்ப்பேன். அப்போது, தேவதைகளின் பாதணிகளுடன் நான் காற்றில் நடந்துகொண்டிருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழனும் : வேகாத ஆறு பருப்புகளும்



**இனி ஈழத்தமிழனின் எதிர்காலம் என்பது பூச்சியம் என்பதற்க்கு கீழ்வரும் ஆறு தரப்புக்களின் வேகாத பருப்பு நடவடிக்கைகளே சாட்சி.**

**1. தமிழ் தேசிய கூட்டமைப்பு**

ஐ.தே.க அல்லது ஸ்ரீ.ல.சு.க போன்றவை அரசியல் கட்சிகளாய் இருக்கலாம். ஆனால் தமிழ் கூட்டமைப்பின் பாத்திரம் ஒரு இனத்தின் விடுதலை கட்சியாக இருக்கவேண்டிய கடப்பாடு உள்ளது. ஆனால் யதார்த்தம் என்ன? சிண்டு முடித்தல்களும் சுயநலவாத-தன்மைகளும் கதிரைபோட்டிகளும் சிங்கள கட்சிகளை விடவும் அதிகமாக காணப்படும் ஒரே கட்சி கூட்டமைப்பேதான்.

தமிழர் துயரம் என்பது அவர்களுக்கு தேர்தல் காலத்தில் மக்களை உசுப்பேற்றி வாக்கு பெறும் உத்தியே அன்றி வேறல்ல. நல்லாட்சி அமைந்ததன் பின்னர் வெறும் அறிக்கைகளை விட்டதை தவிர தமிழரின் நீண்ட கால பிரச்சினை தீர இவர்களால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மகிந்த ஆட்சியில் இருக்கும் வரை ஒன்றுமே செய்ய முடியாது என்றவர்கள் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். ஒன்றை உதாரணமாய் கூறுகிறேன் மிகப்பெரும் எடுப்பில் இவர்களால் பிரச்சாரம் செய்யப்பட்ட மீள்குடியேற்றம் என்பதை கூட முழுமையாய் நிறைவேற்ற முடியவில்லை.

**2.இலங்கை அரசு**

நல்லாட்சிக்கும் மகிந்தவின் காட்டாட்சிகும் இடையில் தமிழர் தொடர்பான கோட்பாடுகளில் மாற்றம் இல்லை என்பதற்கு இரண்டு விடயங்களை சுட்டுகிறேன்.

1. தமிழ் கைதிகள் விடயம்
2. வட கிழக்கில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட காடழிப்பு.

தமிழ் கைதிகள் விடயம் தொடர்பாய் எல்லா பத்தியாளர்களும் பாரதம் எழுதிவிட்டதால் அடுத்த விடயமான காடழிப்புக்கு வருகிறேன்.

வட கிழக்கில் இடம்பெறும் காடழிப்பு தொடர்பில் இலங்கை அரசின் பாராமுகத்துக்கு காரணங்கள்.

1. தமிழர் பகுதிகளின் வளங்களை சூறை செய்தல்.

2. இன்னொரு விடுதலை போராட்டம் தொடங்கினால் வனப்பகுதி புகலிடங்களை இல்லாமல் செய்தல்.

3. யானை தாக்குதல் மூலம் எல்லை புறங்களில் தமிழர் செறிவை குறைத்தலும் மாற்று இனத்தவரை குடியேற்றம் செய்தலும்.

ஈ புகவே இடம் தராத இலங்கை அரசு உலக்கை புக இடம் தருமா என்பதை வாசகர் உங்களின் கவனத்துக்கே விடுகிறேன்.

**3. தமிழகம்**

தமிழகத்தை பொறுத்தவரை அதன் அரசியல் என்பது வடிவேல் போன்ற காமெடியன்களின் சர்கஸ் கூடாரமாயே உள்ளது. ஒரு பக்கம் வெறுமனே கூச்சல் போடும் சீமான் மற்றும் வை.கோ கள். மறுபுறம் ஜெயா, கருணாநிதி போன்ற அறிக்கை புலிகள். இவற்றிடையே நுழைந்து பூச்சாண்டி காட்டுவது நடுவண் அரசுக்கு இலகுவானதே.

இரண்டு விடயங்களை தொட்டு காட்ட விரும்புகிறேன்.

1. தமிழ் நாட்டின் எட்டு கோடி தமிழர்களில் ஒரு கோடி தமிழர்கள் கட்சி பேதம் மறந்து 2009 களில் வீதிகளில் இறங்கியிருந்தால் நிட்சயம் ஒரு தீர்வு வந்திருக்கும்.

2. வட கிழக்கில் தமிழர் தவிர்ந்த மலையாளிகளோ கன்னடர்களோ அல்லது வேறு இனமோ இருந்து தமிழ்நாடு இருக்கும் இடத்தில் அதே இனமும் இருந்திருந்தால் நிட்சயம் தனிநாட்டை அந்த இனம் அடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**4. புலம்பெயர் தமிழர்கள்**

விடுதலைப் புலிகளுக்கு பின்னரான காலத்தில் புலம் பெயர் தமிழரின் ஆற்றுகைகள் குறித்து குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் பிரபாகரன் என்ற நாமம் அரங்கில் இல்லாமல் போன பின்னர் இந்த அமைப்புக்களை ஒழுங்குபடுத்த யாருமற்ற காரணத்தினால் பிளவுகளே அதிகம் காணப்படுகிறது. இதைதவிர நல்லாட்சி அரசின் மாயவலைக்குள் இவர்களின் ஒரு பகுதியினர் வீழ்ந்து விட்டதனால் புலம்பெயர் அமைப்புக்களின் எதிர்காலம் கேள்விக்குறியே.

இதை விட புலம்பெயர் தமிழர்களின் அடுத்த தலைமுறை என்பது தமிழ்மொழி, தாயகம் மறந்த ஒரு தலைமுறையாகவே வளர்ந்து வருவதும் ஆரோக்கியமான போக்கு அல்ல.

**5. சர்வதேசம்**

மாமாக்கள் அல்லது சகுனிகளின் வேலையையே இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் எமது பிரச்சினையில் பார்த்து வருகிறது என்றால் அது மிகையல்ல. எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற ரீதியில் இயங்கியல் கோட்பாட்டை கொண்டிருக்கும் இவர்களை நம்புவது எந்தளவு சாத்தியம் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

**6.ஏனைய அமைப்புக்கள்**

உண்மையில் தமிழர்பால் அரசியலுக்கு அப்பால் மெய் அக்கறை கொண்ட அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் குரல் மிகப்பலவீனமாய் உள்ளது அல்லது அரசியல் சார் செல்நெறியாளர்களினால் இவர்களின் குரல் நெரிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக தமிழ் சிவில் மையம். எமது போராட்டத்தை அடுத்த நகர்வுக்கு கொண்டு செல்லும் ஆளுமை இவர்களிடம் இருந்தும் சில புலப்படும் மற்றும் புலப்படாத காரணிகளால் அந்த ஆளுமையின் முழுவீச்சை தமிழ் மக்களால் அடைய முடியாமை துரதிஸ்டவசமானதே.

இதைதவிர இன்னொரு ஆயுத போராட்டத்தை நடாத்தும் கற்பனையில் சிலர் இருந்தாலும் அது நடைமுறைசாத்தியமற்றதே. ஏனெனில் முப்பது வருட போராடத்தின் அயர்ச்சியும் சலிப்பும் இன்னும் எம்மிடம் இருந்து மாறவில்லை.

பொருளாதாரம் ஆட்பலம் என்பவற்றில் மிகப் பின்தங்கிய நிலையிலேயே தமிழினம் இருக்கின்றது. மேலும் எமது தரப்பின் சூத்திரங்கள் யாவும் எதிரிக்கு தெரியும்.

**தேத்தாமரத்தான்**

இதை விட இன்னுமொரு எட்டப்பன் உருவாகமாட்டான் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அரசியல் ரீதியான மாற்று தலைமை என்பதும் சாத்தியமற்றதே. கூட்டமைப்பை ஒரேயடியாக அரசியல் காலத்திலிருந்து அகற்ற முடியாது. இப்படியான நிலையில் இரு கட்சி அரசியல் எம்மை இன்னும் பலவீனப்படுத்துவதாயே அமையும்.

ஆக விடுதலை புலிகளின் பின்னரான வெளி என்பது சாத்தியங்கள் எதுவுமேயற்ற சூனியமாயே உள்ளது இன்றுவரைக்கும். இந்த சூனிய வெளியை தகர்க்க வானில் இருந்து தேவர்கள் யாரும் இறங்க போவதுமில்லை.

ஒரேயொரு சாத்தியப்பாடு உள்ளது. மேற்குறிப்பிட்ட ஆறு காரணிகளில் சர்வதேசம் மற்றும் இலங்கை அரசு தவிர்ந்த நான்கு தரப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு பொதுவேலைத்திட்டத்தின் கீழ் இயங்குவது. அதன்மூலம் ஏனைய இருதரப்புக்களையும் நெருக்கடிக்குள் தள்ளுதல்.

அதற்கு இரண்டு தன்மைகள் எம்மிடம் தேவை.

1. கோட்பாடுகளில் ஒத்த தன்மை

2. விலைபோகாத தன்மை

ஆனால் அப்படியான உறுதியான இனமாக எம்மை வெளிப்படுத்த தவறியிருப்பதை எமது கடந்தகால வரலாறுகள் சுட்டி காட்டுகின்றன.

மொத்தத்தில் நமது தமிழ் பத்தியாளர்கள் செய்வது போன்று சாத்தியமற்ற கற்பனைகளுடனோ அல்லது நம்பிக்கை கீற்றுகளுடனோ இந்த கட்டுரையை நிறைவு செய்ய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீன்முரசு

## ஆண் பெண் ஜனாஸாக்களுக்கு, ஒரே நேரத்தில் தொழுகை நடத்தலாமா?



ஆண் மைத்துக்களையும் பெண் மையத்துக் நேரத்தில் கொண்டு வந்தால் முதலில் ஆ பிறகு பெண் மையத்துக்கு தொழுகை சந்தர்ப்பங்களில் காணமுடிகிறது.

ஆண் மையத்திற்கும் பெண் மையத்திற்கு நடத்தக் கூடாது என்ற எண்ணத்தில் தா அவர்களின் 'சுன்னா' பற்றிய சரியான தெ இப்படி செய்கிறார்கள். இது தவறாகும்.

ஆண் மையத்திற்கும் பெண் மையத்திற்கும் ஒரே நேரத்தில் ஒரு ஜமாஆத்தாக இருந்து தொழுகை நடத்தலாம். நடத்தவும் வேண்டும் என்பதே நபிகளாரின் சுன்னாவாகும். அப்படி தொழுகை நடத்தும் போது முதலில் கிப்லாவை நோக்கி பெண் மையத்தையும் அதற்கடுத்து (சிறுவர்களின் ஜனாஸாக்கள் இருந்தால் அவர்களது மையத்துக்களையும்) அதற்கடுத்து ஆண் மையத்தையும் வைக்க வேண்டும். அதற்கடுத்து தொழுகை நடத்தக்கூடிய இமாமும், இமாமுக்கு அடுத்து தொழக் கூடியவர்களும் (ம.்.மூம்களும்) நிற்க வேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் ஒன்பது ஜனாஸாக்களக்கும் சேர்த்து ஒரே (ஒரு முறை) தொழுகையாக தொழுவித்தார்கள். (அதில் ஆண், பெண் ஜனாஸாக்கள் இருந்தன). கிப்லாவை நோக்கி பெண் ஜனாஸாக்களையும் அதற்கடுத்து ஆண் ஜனாஸாக்களையும் அதன் பின் இமாமை அடுத்து மக்களையும் ஒரே அணியாக வைத்து (தொழுவித்தார்)கள்.

இன்னுமொரு ஜனாஸா தொழுகையின் போது) அலி (ரலி) அவர்களின் மகளும், உமர் (ரலி) அவர்களுடைய மனைவியுமான உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களுடைய ஜனாஸாவும் ஸைத் என்று அழைக்கப்படும் அவரது மகனுடைய ஜனாஸாவையும்

தொடரும் .. ..

– எம்.ஜே.எம். நிஷ்வான் –

## ஜெபம்

யாரிடம் ஜெபம் செய்ய வேண்டும்? கடவுளிடமா? யேசுவிடமா? தூய ஆவியிடமா? புனிதர்களிடமா?

நாம் கடவுளிடமோ அல்லது யேசுவிடமோ அல்லது தூய ஆவியிடமோ ஜெபம் செய்யலாம். இந்த மூவரிடமும் எழுப்பப்படும் ஜெபங்கள் விவிலியத்தில் அனேக இடங்களில் காணப்படுகின்றன. கடவுள் ஒருவர்தான். இயேசுவிடம் ஜெபம் செய்யும் போது இறைத் தந்தையிடமும் நாம் ஜெபம் செய்கிறோம். நாம் ஜெபம் செய்யும் வார்த்தைகளையும் கடந்து கடவுள் நம் உள்ளத்தையும் எண்ணங்களையும் அறியக்கூடியவர்.

புனிதர்கள் கடவுள் அல்ல. அவர்கள் கடவுளின் விருப்பத்தின்படி இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்கள். தங்களின் தூய வாழ்வால் விண்ணகத்தை சுதந்தரித்துக் கொண்டவர்கள். அவர்கள் இறைவனின் அருகில் அமர்ந்திருக்கிறார்கள், நமக்காக கடவுளிடம் பரிந்து பேசுகிறார்கள், நாம் செய்யும் வேண்டுதல்களை கடவுளிடம் மன்றாடி நமக்குப் பெற்றுத் தருகிறார்கள் என்பதே நமது விசுவாசம்.

சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டும் தூய ஆவி நம் உள்ளத்தில் பொழிந்துள்ள அன்பை முன்னிட்டும் நான் உங்களைக் கேட்டுக் கொள்வது எனக்காகக் கடவுளிடம் வேண்டி, என் போராட்டத்தில் எனக்குத் துணை செய்யுங்கள் எனக்காகக் கடவுளிடம் வேண்டி, என்



போராட்டத்தில் எனக்குத் துணை செய்யுங்கள். -உரோ 15:30

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் சிலை வழிபாடு செய்கிறார்களா?

இல்லை. சிலைவழிபாடு என்பது ஒரு குறிப்பிட்ட சிலைக்கு சக்தி இருக்கிறது என்று நம்பி அந்த சிலையை தெய்வமாக வழிபடுவது.கத்தோலிக்க ஆலயங் -களில் நிறுபப்பட்டிருக்கும் சொருபங்கங்கள் (சொரூபம்-மாதிரி) இயேசுவை அல்லது அந்தந்த புனிதர்களை நம் நினைவில் கொண்டுவர, தியானிக்க, அடையாளமாக பயன்படுத்தப்படுகிறது. அந்த சொரூபங்களுக்கு சக்தி இருப்பதாகவோ அல்லது அவைகளையே கடவுளாகவோ நாம் வழிபடுதில்லை. புனிதர்களை நாம்நம் வாழ்வின் முன்மாதிரியாக் கொள்ளவேண்டும்.

தொடரும் .. .

www.bible.me

## 2040 ஆம் ஆண்டில் டேட்டிங்

2040 ஆம் ஆண்டில் டேட்டிங் இருக்காது: சொல்கிறது ஆய்வு


தொழில்நுட்பத்தின் உச்சபட்ச முன்னேற்றத்தால் 2040 ஆம் ஆண்டு எழுபது சதவிகிதம் பேர் தனக்கு பிடித்த நபரை சந்திக்க விர்ச்சுவல் (Virtual) தொழில்நுட்பத்தைத்தான் நாடுவார்கள் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

லண்டனின் இம்ப்பீரியல் வர்த்தகக் கல்லூரி நடத்திய ஆய்வில், துணையைத் தேட உதவும் இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றம் நமக்கான துணையைத் தேட எளிதில் உதவும் எனவும் தெரியவந்துள்ளது.

அதாவது, நமது மரபணு மூலக்கூறு அமைப்பை வைத்து அதற்கேற்ற துணையைத் தேடிக்கொள்ளலாம்.

இந்த விர்ச்சுவல் தொழில்நுட்பம், நமது ஐம்புலன்களையும் பயன்படுத்த உதவும். ஆகவே, பூமியின் இருவேறு மூலையில் இருப்பவர்களும் இதன் மூலமாகக் கைகோர்த்துக் கொள்ளலாம்.

இந்த ஆராய்ச்சி, நூறு ஆண்டுகளுக்கும் முந்தைய மனிதர்களின் நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், நேர்காணல்கள் ஆகியவற்றைக்



கொண்டு முடிவுக்கு வரப்பட்டுள்ளது.

மேலும், மானுடவியல் என்னும் ஆந்தரபாலஜி, சமூகவியல், தொழில்நுட்பம், உயிரியியல் மற்றும் மருத்துவம் போன்றவற்றில் வல்லுனர்களின் கருத்தைக் கொண்டு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அப்படியென்றால், டேட்டிங் என்பது 2040 ஆம் ஆண்டில் ஒரு வரலாறாக தான் இருக்குமே தவிர நிஜத்தில் இருக்காது.






காதல் என்பதை சிக்ஸ்பேக்
போல பராமரிக்க வேண்டும்...
நட்பு என்பது தொப்பை போல .....
அதுவா வரும்,
போகவே போகாது...!

தலையில் பெரிய கட்டு டாக்டரை பார்க்க வந்தா நம்ம நாராயணசாமி.

"தலையில் ஏன் கட்டு போட்டுருக்கீங்க?"

என் மனைவி வாழைப்பழ தோல் வழுக்கி கீழே விழுந்துட்டா

டாக்டர்

அதுக்கு உங்க மனைவி தானெ கட்டு போடனும்... நீங்க ஏன் போட்டுருக்கீங்க?

அவள் கீழே விழுந்ததைப் பார்த்து கொஞ்சம் சத்தமா சிரிச்சிட்டேன் டாக்டர்

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : நடைமுறை வாழ்வில் இருந்த சிரமம்குறையும்.உங்களை அவமதித்த -வர்கள் தலைகுனியும் சூழல் உருவாகும்.. குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும்.

**ரிஷபம்** : வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீராகும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர்.

**மிதுனம்** :எதிர்பாராத நன்மை கிடைக்கும். நல்ல செயல்களால் சமூகத்தில் அந்தஸ்து கூடும். வெகுநாள் எதிர்பார்த்த நன்மை எளிதில் வந்து சேரும்.

**கடகம்** : புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்களின் செயல்களில் மாறுபட்ட தன்மை இருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**: நண்பர்களிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய செயல் திட்டம் உருவாகும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கன்னி** : எதிர்பாராத நன்மை கிடைக்கும். நோய் தொந்தரவு குறையும். மனைவியின் சொல்லும், செயலும் குடும்பத்துக்கு நன்மை தரும்.

**துலாம்** : தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். பணியாளர்கள் பணியிடத்தில் சுமுக சூழல் இருக்கும்.

**விருச்சிகம்** : உடன் பிறந்தவர்களின் உதவி உண்டு. பயணத்தால் பெறுகின்ற நன்மை அதிகரிக்கும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு** : ஆடம்பர செலவுகளை தவிர்ப்பதால் சிரமம் விலகும். தொழில், வியாபாரம் செழிக்க கடுமையாக போராட வேண்டி வரும்.

**மகரம்** : தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி சலுகை பெறுவர்.

**கும்பம்** : ஆர்வமுடன் . தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு கடனுதவி கிடைக்கும்.

**மீனம்** : தொழில், வியாபாரத்தில் இப்போதைய நிலை தொடரும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடினாலும் பணவரவு திருப்திகரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 06

01. ஒரு வரிசையில் ஆண்பிள்ளைகள் இருந்தனர். ஒருபக்கத்திலிருந்து கணக்கிடும் போது கண்ணன் 15 தாவதாகவும் மறு பக்கத்திலிருந்து கணக்கிடும் போது 8 வதாகவும் இருந்தான் எனின், வரிசையிலுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை?
(1) 23 (2) 24 (3) 22

02.. பிள்ளையொன்று இரும்பு ஒரு கிலோக்கிராமையும், பஞ்சு ஒரு கிலோக்கிராமையும் தராசின் இரு பக்கத்திற்கும் ஒவ்வொன்றையும் இட்டார். அதன்படி கீழேயுள்ள வெளிப்பாட்டில் பிழையில்லாததைத் தெரிவு செய்க.
(1) இரும்புள்ள பக்கம் பாரம் கூடியது
(2) தராசின் இரு பக்கமும் சமனாகும்
(3) பஞ்சுள்ள பக்கம் பாரம் குறையும்

03.. மூன்று வாழைப்பழத்தின் விலை 21 ரூபாய் எனின் ஆறு வாழைப்பழங்களின் விலை யாது?
(1) 36 ரூபாய் (2) 42 ரூபாய் (3) 54 ரூபாய்

04.. ஒரு சதுர வடிவக் காணியில் ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது 10 தூண்கள் இருந்தன எனின், அக்காணியிலுள்ள மொத்தத்தூண்கள் எத்தனை?
(1) 36 (2) 40 (3) 32

**கீழே தரப்பட்ட கருத்திற்கேற்ற பழமொழியைத் தெரிவு செய்து கோடிடுக.**

05. வீண் செலவு ஆயினும் அதனை அளவோடு செய்ய வேண்டும்.
(1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
(2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
(3) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

06. அவரவருக்கு அவரவர் உடைமைகள் சிறந்தனவாகவே இருக்கும்.
(1) அழுதாலும் பிள்ளையை அவளே பெறவேண்டும்
(2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
(3) ஆனைக்கும் அடிசறுக்கும்

07. உயிருள்ளவை, பறவை, மைனா என்ற தொடர்பினைக்காட்டும் விடை யாது?




(1) (2) (3)

08. கீழ்வரும் சொற்களை ஏதோ ஒருமுறையில் ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.


அ. மாவட்டம், மாகாணம், கிராமம், வீடு, நாடு (.....................)

ஆ. அதிபர், ஆசிரியர், பகுதித்தலைவர், வகுப்புத்தலைவர், மாணவர்த்தலைவர் (....................................)


09. அருகில் நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவு யாது?
1. 5 கட்டங்கள்
2. 7 கட்டங்கள்
3. 9 கட்டங்கள்



கீழ்க் காட்டப்படும் எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

10.


(1) 21 (2) 16 (3) 17

11.


(1) 21 (2) 28 (3) 24

01. தாள்களை இணைக்க பயன்படுத்தப்படும் கருவி எது?
1. துளை கருவி 2. பிணை கருவி 3. துறப்பணம்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






**சிந்திக்க .. ..**
**நீ சுமக்கின்ற நம்பிக்கை**
**நீ கீழே விழும் போது**
**உன்னை சுமக்கும்!**

## அறிவுரை அனைவரிடத்திலும் பெறக் கூடாது

மதிய வெயில் நேரத்தில் வெட்டுக்கிளி ஒன்று இங்கு அங்கும் குதித்து பாட்டுப்பாடி ஆடிக் கொண்டிருந்தது.


அப்போது எறும்பு ஒன்று அரிசி ஒன்றை எடுத்துக் கொண்டு அதே பாதையில் தன் வீட்டிற்க்கு சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த வெட்டுக்கிளி எறும்பிடம் இப்போது என்ன அவசரம். சிறிது நேரம் என்னைப் போல நீயும் என்னுடன் விளையாடலாமே என்றது.

அதற்கு எறும்பு இன்னும் சில காலங்களில் மழைக் காலம் வந்து விடும் அதனால் அந்த நேரத்திற்குத் தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக் கொள்கின்றேன்.

வெட்டுக்கிளி எறும்பிடம் மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கின்றது. நான் விளையாட செல்கின்றேன் என்று சிரித்து கொண்டே நடனமாடி சென்றது.

நாட்கள் கடந்தன மழைக்காலமும் வந்தது. தான் சேகரித்த உணவை உண்டு தன் வீட்டிலே எறும்பு இருந்தது. ஆனால் வெட்டுக்கிளியே உணவு தேடி அங்கும் இங்கும் சுற்றித் திரிந்தது.

அப்போது வெட்டுக்கிளி எறும்பிடம் உதவி கோட்



க விரைந்து சென்றது. எறும்பின் வீட்டை அடைந்த வெட்டுக்கிளி எறும்பிடம் எனக்கு பசிக்கின்றது எனக் கூறி உணவு ஏதாவது கிடைக்குமா? எனக் கேட்டது.

உடனே எறும்பு வெட்டுக்கிளியை தன் வீட்டினுள் அழைத்து தான் மழைக் காலத்திற்கு என சேமித்த உணவை வெட்டுக்கிளிக்கும் கொடுத்தது. அப்போது எறும்பு வெட்டுக்கிளியிடம் அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே இப்போது நான் அன்று சேமித்த உணவு தான் நமக்கு இம் மழைக் காலத்திற்கு உதவியாக உள்ளது. இனிமேலாவது விளையாடாமல் வெயிற்காலத்திலேயே உணவை சேமித்துக் கொள் என்று கூறியது.

எறுமம்பின் வார்த்தை கேட்ட வெட்டுக்கிளி கால நேரம் பாராது உழைத்தால் வாழ்வு பிரகாசிக்கும் என உணர்ந்து கொண்டது.


**கடின உழைப்பு ஒரு நாள் பலன் தரும்**

**மலைமுரசு**




தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 10 வயதான மாணவர்கள் மாத்திரம்
*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159எ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

*கோ. ரினோான்*



*விதுஷா . ரோ*
*59 அருணகிரி வீதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

வள்ளுவர் கிராமத்திலிருந்து நகரத்திற்குப் பொருள்கள் வான்களின் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. ஒரு வானில் ஏற்றத்தக்க உயர்ந்த பட்ச நிறை 1000Kg ஆகும்.

ஒரு வர்த்தகர் நகரத்திற்கு கொண்டு செல்வதற்காகப் பல்வேறு நிறைகளைக் கொண்ட சில சாக்குகளைச் சேகரித்தார். அவற்றின் நிறைகள் பின்வருமாறு ஓர் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன.

| ஒரு சாக்கின் நிறை Kg | சாக்குகளின் எண்ணிக்கை (f) | வகுப்பாயிடைகளின் நடுப்பெறுமானம் (x) Kg | (fx) |
|---|---|---|---|
| 0-8 | 6 | 4 | 24 |
| 8-12 | 2 | _ | 20 |
| 12- | 6 | 14 | _ |
| 16 | 15 | 18 | 270 |




(1) அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(2) வர்த்தகர் சேகரித்த அரிசிச் சாக்குகளின் எண்ணிக்கை யாது?

(3) அட்டவணையில் உள்ள தகவல்களைக் காட்டுவதற்குத் தரப்பட்டுள்ள ஆள் கூற்றுத் தளத்தின் மீது ஒரு வலையுருவரையத்தை வரைக.

(4) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப எல்லா அரிசிச் சாக்குகளையும் வானில் ஒரே தடவையில் ஏற்றலாமென வர்த்தகர் உத்தேசித்துள்ளார் அவருடைய இந்த யோசனைக்கு அடிப்படையாய் அமைந்த காரணம் யாது?

(5) வர்த்தகரின் யோசனை உண்மையாக அமையாத சந்தர்ப்பங்களும் இருக்க - லாமென காட்டுக

## பாடம் : வரலாறு

1 நீர்வள நாகரீகம் என்றால் என்ன?

2 குளம் ஒன்றின் பகுதிகள் எவை?

3 வசப மன்னன் ஆற்றிய சமயப் பணிகள் 5 தருக?

4 1946இல் ஜப்பானில் புதிய சனநாயக ஆட்சி முறை ஒன்றை உருவாக்கியவர்?

5 கம்பளை காலத்து சிறப்பான நூல் எது?

6 விவசாயியின் ஒளி என்ற கலவரம் எப்போது இடம் பெற்றது?

7 4ம் மகிந்தனின் காலத்து சம்பவங்களை கூறும் கல்வெட்டு எது?

8 நச்சுராலிஸ் ஹிஸ்ரோரியா என்ற நூலின் ஆசிரியர் யார்?

9 யாப்பகூவ இராசதானியின் முதல் மன்னன் யார்?

10 தொலைகாட்டியை அறிமுகப்படுத்தியவர் யார்?

11 4ம் புவனேகபாகுவின் சமூகப்பணிகள் 5 தருக?

12 6ம் பராக்கிரமபாகு மன்னனின் சமய சமூகப் பணிகள் எவை?

**வரலாறு - யாப்பு**
ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

**மாறுபட்ட பொருள் குறிக்கும் வகையில் அமைந்த இணை மொழிகள்**

15.விதி விலக்கு
16.வானகமும் வையகமும்
17.விண்ணும் மண்ணும்
18.விருப்பு வெறுப்பு
19.தொகுத்து வகுத்து
20.தொகை வகை
21.குறை நிறை

**ஒன்று மட்டுமே பொருளுடையதாக அமைந்த ஓசை நயம் கருதி வருவன**

1. அகட விகடம்
2. அமளி துமளி
3. அரை குறை
4. அல்லை தொல்லை
5. அல்லோல கல்லோலம்
6. அறக்க பறக்க
7. கண்டதும் கடியதும்
8. கிட்டத்தட்ட
9. கொஞ்ச நஞ்சம்
10. கோணல் மாணல்
11. கோயில் குளம்
12. சந்து பொந்து
13. சப்புச் சவறு
14. சின்னா பின்னம்
15. தட்டு முட்டு
16. தாறு மாறு
17. திக்கு முக்கு
18. தில்லு முல்லு
19. துணி மணி
20. நகை நட்டு
21. பச்சை பசேல்
22. பயிர்பச்சை
23. மிச்ச சொச்சம்
24. வாட்ட சாட்டம்



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special
Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,

## Grammar

**Fill in the blanks in the following text using the words given in the box.**

sitting, out, quiet, delighted, sea, saw, sunrise, he,
mending, day, soon, went, asked, disappearing,

Long, ago, on a Saturday I walked towards the harbor which was not far from my home. The harbor was very (1)............ it was just after (2)......... and the mist was (3)......... A few fishermen were (4).........their nets patently. (5)......... jim who was (6)......... near his boat. I (7)......... over to him and (8)......... what he was doing. (9)......... we became friends. (10).......... invited me to go (11)...........to sea. I was (12)......... it was on that (13)........... my love of the (14)............. began. I became a sailor and have been one ever since.

## பாடம் : பௌதீகவியல்

01. பின்வரும் சந்தர்ப்பங்களில் எதன் போது விஞ்ஞான ரீதியாக 'வேலை' செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும்?
    (1) மாணவன் ஒருவன் வகுப்பிலே ஒரு மணித்தியாலமாகக் கவிதையை மனனஞ்செய்தல்.
    (2) நிற்பாட்டப்பட்டிருக்கின்ற பேருந்து ஒன்றை ஒருவர் தள்ள முயலுதல்.
    (3) லொறியில் நெல் மூட்டையை 200m தூரம் கிடையாகக் கொண்டு செல்லல்.
    (4) கிணற்றில் இருந்து நீர் கொண்ட வாளியை இழுத்துக் கொள்ளல்.

02. கடத்தியின் வழியே மின்னோட்டம் பாயும் போது அழுத்த வித்தியாசத்திற்கும் மின்னோட்டத்திற்குமிடையே உள்ள தொடர்புடைமையை முதன்முதலாக எடுத்துரைத்த விஞ்ஞானி
    (1) ஓம் (2) கல்வான்
    (3) மைக்கர்பரடே (4) நியூற்றன்

03. கடதாசியினால் செய்யப்பட்ட படகு ஒன்று குளத்தில் உள்ள அமைதியான நீரின் மீது வைக்கப்பட்டுள்ளது. அந்நீரின் மீது சிறு கல்லை எறியும் போது அலை உண்டாகையில் பின்வரும் எது நிகழ்கின்றது?
    (1) அலை செல்லும் திசையிலே நீர் பாய்தல்
    (2) படகு அலை செல்லும் திசையில் செல்லுதல்
    (3) படகு நீரின் மீது ஓர் இடத்திலே மேலும் கீழும் செல்லல்
    (4) அலை செல்லும் திசைக்கு எதிரான திசையில் படகு அசைதல்.

04. ஒரு கடத்தியை காந்தப் புலத்தினுள்ளே அசையச் செய்யும் போது தூண்டல் ஓட்டத்தின் திசை பற்றி பிளமிங்கின் வலக்கை விதி விபரிக்கின்றது இதற்கேற்ப அசைவு, புலம், தூண்டல் ஓட்டம் ஆகியவை முறையே
    (1) பெருவிரல், சுண்டுவிரல், நடுவிரல்
    (2) பெருவிரல், நடுவிரல், சுண்டுவிரல்
    (3) சுண்டுவிரல், நடுவிரல், பெருவிரல்
    (4) நடுவிரல், சுண்டுவிரல், பெருவிரல்

05. தளவாடி, குழிவாடி, குவிவாடி ஆகிய மூன்று வகைகளுக்கும் பொதுவான உண்மையான கூற்று?
    (1) நிமிர்ந்த விம்பங்கள் மாத்திரம்.
    (2) மாய விம்பங்கள் மாத்திரம்.
    (3) ஒளித்தெறிப்பின் மூலம் விம்பம் உருவாகுதல்.
    (4) பொருள்களுக்கு சமமான அளவுக்கு விம்பங்கள் உண்டாகும் ஒரு சந்தர்ப்பமிருத்தல்.

06. கடத்தியினூடாக ஆடலோட்டம் பாயும் மின் இலத்திரன் பாச்சல் பற்றிய பின்வரும் கூற்றுக்கள் சரியாக
    (1) இரு பக்கங்களும் பாய்தல்
    (2) ஒரு பக்கங்களும் பாய்தல்
    (3) பாயும் திசை நேரத்துடன் மாறுதல்
    (4) பாயும் திசை பற்றி கூற முடியாது.

**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**
**பல்தேர்வு**
ஆசிரியர் . பொன்னுத்துரை தவசிதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தூரனின் நினை....

திருமலையில் கடந்த திங்கட்கிழமை நடந்தேறியது.

வண. பிரபாகரன் அடிகளாரின் தலைமையில் அனைத்துச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும், மத குருக்களும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்டத் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி, மாகாண சபை உறுப்பினர்கள் நாகேஸ்வரன், ஜெனார்த்தனன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தலைமையேற்று நடாத்திய வண. பிரபாகரன் அடிகள் தமது உரையில் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் ஊடாகவே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என வலியுறுத்தியதுடன் ஈகைச் சுடரை ஏற்றி வணக்கத்தையும் செலுத்தினார்.

சிறப்புரை வழங்கிய இரா.ஸ்ரீஞானேஸ்வரன் ஜனவரி 8ம் திகதியில் இருந்து உருவாகியுள்ளதாகக் கூறப்படும் நல்லாட்சி தமிழர்களின் அடிப்படை வேண்டுகோளைக்கூட நிறைவேற்றாது என்ற உண்மையைச் செந்தூரனின் ஈகம் உலகம் முழுக்கப் பறைசாற்றி விட்டது என்றும், அவரது தனிப்பட்ட போராட்டம் சரியாக இருந்தாலும் அவரது போராட்ட வடிவம் இனி எப்போதும் தமிழர்களிற்கிடையில் நிகழக் கூடாது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய கல்வி அமைச்சர் உண்மையிலேயே தமிழர்கள் ஒரு கையறு நிலையிலேயே தற்போது இருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டார்.

மாகாணசபை உறுப்பினர் நாகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் நல்லாட்சி அரசாங்கத்தினால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது மிகச் சுலபமானது எனத் தெரிவித்ததுடன் அதனை நிறைவேற்றத் தாமதிக்கின்றார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் திருமலைத் தலைவி ஆஷா, சிவில் சமூகச் செயற்பாட்டாளர் பஷ்சலிங்கம் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்.

பிரார்த்தனைகளை சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள், வண. சுஜி அடிகளார் உட்பட மேலும் இரு குருக்கள் நடாத்தினர்.

## வெள்ள நிவாரண...

சுகந்தன் மற்றும் மாவட்டச் செயற்பாட்டாளர்கள் திரு-திருமதி ஆறுமுகதாஸ் ஆகியோரால் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வை ஒழுங்குபடுத்தவென கட்சியின் இளைஞர் அயித் தலைவர் சக்தி திருமலைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுலர் உணவுப் பகிர்விற்கு ஜெர்மனி வூல்ப்பெற்றால் நவதுர்க்கா ஆலய நிர்வாகம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரசாயனப் பகுப்பாய்...

என்பதாலேயே இரசாயனப் பகுப்பாய்வுகளின் பின்னர் சில உண்மைகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எத்தனை உடலங்கள் கைப்பற்றப்பட்டன, அவற்றின் நிலை என்ன என்பது பற்றிய தகவல்கள் எவையும் வெளிவராத நிலையில் திருகோணமலையிலுள்ள வதைமுகாமை ஆராய்ச்சி செய்த ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளாலேயே இந்த உடலங்களின் எலும்பு எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியும் பிரதிநிதிகளுடன் இலங்கையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் திருகோணமலை வதைமுகாமிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வதைமுகாம் தொடர்பான தகவல்கள் வெளியாகியவுடன் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காககப் பாதுகாப்பு ராசாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன "திருகோணமலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் சுதந்திரமாக ஆய்வுகளில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவித்திருப்பதுடன் ஐநா அதிகாரிகளுடன் குற்றப்புலனாய்வாளர்களும் இணைந்தே செயற்பட்டதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ விடுதலை...

ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு சர்வதேசம் உட்பட ரெலோவின் 131 பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

கட்சியின் எதிர்கால செயற்திட்டங்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழ் மக்களின் மீள் குடியேற்றம், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பதிவு தொடர்பான விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் நித்திமாஸ்டர் தெரிவித்தார்.

## மட்டக்கள....

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான மயிலத்த மடு (மயில் தங்கிய மடு) மாதவணை (மாடுகள் தவணை முறையில் தங்கும் இடம்) பகுதிகளில் தமிழர்கள் மீது சுடுகலச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அச்சமடைந்துள்ள தமிழ மக்கள் தமது கால்நடைகளையிட்டும் தமது வாழ்வாதாரத்தையிட்டும் பெரும் கவலை கொண்டிருப்பதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

குறித்த பிரதேசங்களில் மாடுகளை மேய்ப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணிகளுக்குள் தற்போது அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்களிடம் ஆயதங்கள் இருப்பதாகவும் அவர்களே இத் தாக்குதலை நடாத்தியதாகவும் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.

நடத்தப்பட்ட சுடுகலப்பிரயோக்தினால் தற்போது வரை பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளதுடன் 15 ற்கு மேற்பட்ட மாடுகள் காயமடைந்துள்ளதாகவும் குறித்த மாடுகளை பார்வையிடச் சென்ற தமிழர்கள் மீது சிங்கள ஆயுததாரிகள் சிலர் கட்டிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயத்தைக் கரடியனாறு காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டும் எந்தப் பயனுமில்லை என பாதிக்கப்பட்ட கால்நடைவளர்ப்பார்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

யுத்தத்திற்கு பின்னர் மேய்ச்சல் தரை பிரதேச எல்லைகளுக்குள் அத்துமீறி குடியேறியுள்ள சிங்களவர்கள் மாடுகள் மேயும் பிரதேசத்திற்குள் இராணுவத்தின் பாதுகாப்பில் இரவு நேரங்களில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், அந்தப்பகுதிகளுக்குச் செல்லுகின்ற தங்களது மாடுகள் மீது சுடுகலப் பிரயோகம் மேற்கொள்ளுவதாகவும் இராணுவம் மற்றும் காவல்துறையினரின் ஆதரவுடனேயே இந்நடவடிக்கை இடம் பெறுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் 45,000 மாடுகளும் 600ற்கு மேற்பட்ட கால்நடைவளர்ப்பாளர்களும் தங்கியுள்ளதாகவும் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புக்களோ, உயிருக்கான உத்தரவாதங்களோ இல்லாத நிலையில், தினம் தினம் மிகுந்த அச்சத்தின் மத்தியிலேயே தங்களது கால்நடைகளை வளர்த்து வருவதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.




## ஐ.ஓ.சியின்.....

அகலப்படுத்துவது தொடர்பாகச் பேசியுள்ள குழுவினருக்கும் முதலமைச்சருக்கும் இடையே மேலும் கிழக்கு மாகாணத்திலுள்ள வீதிகளை புனரமைப்பதற்கான தாரினை இறக்குமதி செய்து அதனை சந்தைப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இவ்வாறு சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஜனவரி 8ன் பின்...

என்று உலகமே சொல்லுகின்றது ஆனால் அவர்கள் இதுவரையும் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை என்பதுதான் உண்மை.

தொடரூந்தில் தன் உயிரை இழந்த செந்தூரன் தனது கடிதத்தில் சிறையில் வாடும் எமது இளைஞர்களின் விடுதலை வேண்டியே எனது உயிரை விடுகின்றேன் என்று கூறியிருப்பதன் மூலம் அவனது தியாகத்தின் உணர்வு எந்தளவிற்கு மேலோங்கி காணப்படுகின்றது என்பது புலனாகின்றது. இங்குதான் அன்பு, இரக்கம், சகோதரத்துவத்தினை காண்கின்றோம் அவன் மனித நேயம் படைத்தவனாக வாழ்ந்திருக்கின்றான் என்றும் தெரிவித்துள்ளார்.

## தென்கிழக்கு...

இதனைத் தொடர்ந்தே இவ்விடயத்தை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது தென்கிழக்கு பல்கலைகழகத்தின் பொறியியல் பீடம் ஒருபோதும் மூடப்பட மாட்டாது எனவும், குறித்த பிரச்சினை சுமூகமாக தீர்த்து வைக்கப்படும் எனவும், அங்கு நிலவும் குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டு சகல வசதிகளும் கொண்டதாக அபிவிருத்தி செய்து தரப்படும் எனவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றி.....

திருகோணமலையில் நடைபெற்ற போதே இவ்வுறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான வேலைத்திட்டத்திற்கு உதவி வழங்குவதுடன் ஐரோப்பிய ஒன்றியம் இம்முறை இலங்கைக்கு ஒதுக்கிய 500 கோடி ரூபாவில் கிழக்கு மாகாணத்திற்கு 150 கோடி ரூபாவை வழங்குவதாகவும் அத்துடன் வட கிழக்கிலே ஐரோப்பிய ஒன்றியம் அமைத்துக் கொடுக்கவுள்ள 3000 வீடுகளில் கணிசமான வீடுகளை கிழக்கு மாகாணத்திற்கு வழங்குவதாகவும் டேவிட் டாலி இதன்போது முதலமைச்சரிடம் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண சபை...

வைத்திய சாலையாக தரமுயர்த்தல்.

6. 2016 வரவு செலவு திட்டத்தில் 969 மில்லியன் ரூபாய் விசேட திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2016ற்கான கிழக்கு மாகாண நிதி 4232 மில்லியன் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

7. விகிதாசார அடிப்படையை கருத்தில் கொண்டு பட்டதாரி ஆசிரியர்களை உடனடியாக பணிகளுக்கு அமர்த்துவதற்கு ஏற்பாடுகளை செய்வதற்கு கல்வியமைச்சின் செயலாளரை அமைச்சரவை வாரியம் கேட்டுக்





கொண்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மட்டக்களப்பு கரடியனாறு விவசாய பயிற்சி நிலையத்தினை கல்வி கல்லுரி தரத்தில் தரம் உயர்த்துதல் போன்றவைகளுக்கான அமைச்சரவை அங்கீகாரங்களும் தீர்மானங்களும் ஏற்கப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு




அண்மையில் கூட சுவரை வைத்து ஒரு சினிமாப்படம் எடுத்திருந்தார்கள். இந்த சுவர்கள் வரலாற்றில் சீனப் பெருசுவர் முக்கியமானது. அடுத்தது இந்த பேர்ளின் சுவர்தான். அமேரிக்கா இந்த சம்பவத்திட்குள் எங்கே காணவில்லை என்று மட்டும் கேட்க வேண்டாம். 1963 இல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி John F. Kennedy கூட பெர்லினுக்கு சென்று அந்த சுவரை பார்வையிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சுவர் எழுப்பியது என்னவோ இரசிய ஆதரவு கிழக்கு ஜெர்மன் தான். ஆனால் உள்ளே அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் பெரும்பாலானவை அமெரிக்காவினுடையது. அதாவது யாரோ பற்ற வைத்த நெருப்பில், பேர்ளின் சுவர் ஓரம் நன்றாக குளிர் காய்ந்தது அமேரிக்கா.

அந்த சுவர்களின் நினைவிடங்கள் பல இன்றும் இருக்கின்றன. சுவரோவியங்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. விரும்பியவர்கள் தேடித் பார்த்துக் கொள்ளுங்கள். பல ஆவணப்படங்கள் உட்பட, வரலாற்றை உருக்கமாகச் சொல்லும் பல திரைப்படங்கள் கூட இருக்கின்றன. (The Spy Who Came in from the Cold, Introduction, The Tunnel .......)

இன்றைய உலக ஒழுங்கின் சமகால நிலவரத்தில், நவம்பர் 13 அன்று பிரான்ஸ் மீதான தீவிரவாத தாக்குதல் பற்றித்தான் அனைத்து ஊடகங்களும் செய்திகளை வெளியிட்ட வண்ணமுள்ளன. 129 க்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டும், 350 பேருக்குமேல் காயப்பட்டும் மேலும் பல இழப்புகளுடனும் அந்த சம்பவம் போய்க் கொண்டு இருக்கிறது. எங்கு கொல்லப்பட்டாலும் அது மனித உயிர்தான். மனித உயிரின் மதிப்பு அல்லது இழப்பின் தாக்கம் என்பதை மிகவும் நன்றாகவே அறிந்த தமிழ் இனம் நாம். ஆகவே அநியாயமாகக் கொல்லப்பட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஒன்று- காரியம் ஒன்று.

சரி... இதனை இங்கே நான் சொல்வதால், அமெரிக்காவிற்கும் இதற்கும் என்ன தொடர்பு? சத்தியமா எனக்குத் தெரியாது. ஆனால் அமெரிக்காவினதும், பிரான்ஸ் நாட்டினதும் கொடிகளில் உள்ள மூன்று நிறங்களும் ஒரே மாதிரியானவை. குணங்களும் கிட்டதட்ட ஒன்று. ஆனால் வடிவங்கள் மட்டும் வேறாக இருக்கிறது என்பது மட்டும் சின்ன வித்தியாசம்.

அதனை விட (Statue Of Liberty) சுதந்திர தேவி சிலையை 1886 இல் அமெரிக்காவிற்குப் பரிசளித்ததும் பிரான்ஸ் தான். இதனையும் தாண்டி அமெரிக்காவிற்கும் பிரான்ஸ் இற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் இன்று நேற்றல்ல பன்னெடுங்காலமாக பல நூற்றாண்டுகள் கடந்து தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இதன் ஆரம்பங்கள் பற்றி முன்னைய அத்தியாயங்களில் பார்த்திருக்கிறோம்.

ஆனால் எங்கெல்லாமோ மனித உயிர்கள் கொல்லப் பட்டபொழுது துடித்து எழாத உலகம், பிரான்ஸ் என்றதுமே (அமேரிக்கா உட்பட) திடுக்கிட்டு எழுந்ததது ஏன்? மனித அழிவு காரணமாக இருந்தாலும், முதல் காரணம் - UNSC veto power. இதனைத் தவிர வேறெதுவும் சொல்ல முடியாது. இன்றைய உலகை நிர்ணயிக்க கூடிய ஆகக் கூடிய சக்தி மையங்கள் ஐந்தில் பிரான்ஸ் கையிலும் ஒன்று இருக்கிறது. அந்த அதிகாரத்திட்காகத்தானும் உலகம் அவர்களுக்கு அஞ்சலிகளையும் இரங்கல்களையும் சொல்லியே ஆகவேண்டும். ஏன்? நம்ம நாட்டில தெற்கில் இருந்து கூட ஒரு ஓநாய் ஊளையிடுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

சரி அவற்றை பற்றி ஆராய தொடங்கினால் திசைமாறி நாம் போகவேண்டி வரும். அவை நிற்க.. நாம் மீண்டும் பனிப்போரின் முக்கிய சம்பவம் ஒன்றிற்குள் நுழையலாம். அட... இங்க பாருங்களேன்...!

அந்த பனிப்போரின் முக்கிய சம்பவத்திட்குள் பிரான்ஸ் ம் வந்து தொலைத்து இருக்கிறது. பிரான்ஸ் ம் ஒரு அங்கம். இந்த சம்பவத்திற்கு. எமது தாயக நிலத்தில், தமிழரின் பூர்வீக நிலங்களை வேற்று இனத்தவர்கள் கூறு போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது காலங்காலமாக நெடுங்காலமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதுவே தமிழர்கள் மனங்களில் இலங்கை குடிமகன் என்கிற மனநிலையில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. போர் மூண்டதுக்கு இதுவும் ஒரு காரணம்.

## நிகழ்வுகள்

### கந்தளாயில் திருகோணமலை இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையினரின் இரத்ததான முகாம்


இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளை இளைஞர் பிரிவும், கந்தளாய் பொலிஸ் நிலையமும் இணைந்து கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அல்-தாரிக் வித்தியாலய மண்டபத்தில் இரத்ததான முகாம் ஒன்றினை 29.11.2015 வெற்றிகரமாக நடாத்தினர்.

அவ் இரத்ததான முகாமுடன் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாமும், இலவச கண் பரிசோதனை முகாமும் நடைபெற்றது.

கந்தளாய் காவல் நிலையப் காவல்துறையினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளைத் தொண்டர்களும், பொதுமக்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

இந் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளையின் கந்தளாய் பிரிவுத் தலைவர் திருமதி எம் எம் ஆரியவதி, இளைஞர் பிரிவின் தலைவர் திரு. ஏ. ஜே. பிரேமராஜா, கிளையின் நிறைவேற்று அதிகாரி டாக்டர். என். ரவிச்சந்திரன் ஆகியோரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களும், இளைஞர் பிரிவுத் தொண்டர்களுடன் உறுப்பினர்களும் இவ் இரத்ததான நிகழ்வில் கலந்து கொண்டனர்.





### முள்ளிப்பொத்தானை ஹிஜ்ரா பரிசளிப்பு விழா

தம்பலகாம நிருபர்







முள்ளிப்பொத்தானை ஹிஜ்ரா பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வு 28-11-2015அன்று மாலை மு ப 3.00 முள்ளிப்பொத்தானை ஹிஜ்ரா மத்திய கல்லூரியில் இடம் பெற்றது குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் குழு தலைவருமான ஆர் எம் அன்வர் மற்றும் சினக்குடா பொலிஸ் பயிற்சி பொருப்பு அதிகாரி எம் எம் தமீம் தம்பலகாமம் பிரதேச முறைப்பாட்டு பொருப்பான பொலிஸ் அதிகாரி எஸ் எம் அன்சார் முன்னால் கிழக்கு மாகண முன் பள்ளி பாடசாலைக்கு பொருப்பான இணைப்பாளர் :எம் எம் தௌபீக் உட்பட பிரதேச முன் பள்ளி ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் அனைவரும் வருகை தந்து சிறப்பித்ததையும் பிரதம அதிதி பொலிஸ் அதிகாரி பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

விளையாட்டு முரசு

# தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்க்குப் பாராட்டு

**தி**ருகோணமலை வலயக் கல்விப்பிரிவிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களில் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி -களைப் பெற்ற மாணவர்களுக்கான விசேட பரிசளிப்பு விழாவொன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 3ம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கின் கல்வி கலாசார அமைச்சர் கௌரவ . தண்டாயுதபாணி, முன்னாள் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ஈஸ்வரதாசன் உட்படப் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.







# கவுகாத்தி அணி இந்திய பிரீமியர் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி

**இ**ந்திய பிரீமியர் கால்ப் - பந்தாட்டப் போட்டிகளில் கவுகாத்தியைப் பிரதிநிதித்-துவப்படுத்தும் நோர்த் ஈஸ்ட் அணி அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது.

8 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் நடப்பு சாம்பியன் அட்லெடிகோ கொல்கத்தா, எப்.சி. கோவா, டெல்லி டைனமோஸ் ஆகிய 3 அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றுவிட்டன.

நார்த் ஈஸ்ட் அணியின் நிக்கோலஸ் ஆட்டம் தொடங்கிய 4-வது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.

இதனையடுத்து 6-வது நிமிடத்தில் புனே அணியின் ஜேம்ஸ் பெய்லி கோல் அடித்தார். பின்னர் நார்த் ஈஸ்ட் அணியின் கமரா 18-வது நிமிடத்திலும், ஆண்ட்ரி முட்டு மற்றும் அட்ரியன் பைக்கி கோல் அடித்தனர். இறுதியில் புனே அணியின் ஆண்டிரியன் முட்டு 86-வது நிமிடத்தில் கோல் அடித்தார். இதன்மூலம் நார்த் ஈஸ்ட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் நார்த் ஈஸ்ட் அணி தனது அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்து கொண்டுள்ளது

# ரஹானே சதம் அஸ்வின் அரைச்சதம் இந்தியா ஸ்திரம்

**இ**ந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நாலாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகின்றது.

கடந்த 3ம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

எனினும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் இரண்டு இலக்க ஓட்டங்களை எடுக்க களத்தில் பலமான நிலையில் இருந்த ரஹானே சதம் அடித்து இந்திய ஓட்ட எண்ணிக்கையைப் பலமான நிலைக்கு இட்டுச் சென்றார்.

127 ஓட்டங்களுடன் அவர் அரங்கு திரும்பியவுடன் களத்தில் நுழைந்த சர்மா மற்றும் சாஹா ஆகியோர் தலா ஒரு ஓட்டங்களுடன் அரங்கிற்குத் திரும்ப ஆட்டம் கண்ட இந்திய அணியைத் தூக்கி நிறுத்தினார் அஸ்வின்.

அஸ்வினின் அபார ஆட்டம் மூலம் பெறப்பட்ட அரைச்சதத்துடன் 113 பரிமாற்றங்கள் முடிவில் 326 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து உறுதியான நிலையில் தனது துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தது.

# சுனில் நரைனின் சுழலுக்குத் தற்காலிகத் தடை

**மேற்**கிந்தியத் தீவுகள் அணியின் பந்து வீச்சாளர் சுனில் நரைனுக்கு சர்வதேசப் போட்டிகளில் பந்து வீசத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவரது பந்து வீச்சு தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தால் சர்வேதச கிரிக்கெட் கவுன்சில் கடந்த 17 ஆம் திகதி இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்றில் சுனில் நரைனுக்கு சோதனை நடத்தப் பட்டது.

அப்போது,அவர் அனுமதிக்கப்பட்ட 15 பாகைச் சரிவுக்கும் அதிகமாக கையை வளைத்துப் பந்து வீசுவது தெரிய வந்துள்ளது.

இதனால், சுனில் நரைன் சர்வதேசப் போட்டிகளில் பந்து வீசுவதற்கு கடந்த 3ம் திகதி முதல் தற்காலிகத் தடையினை ஐசிசி விதித்துள்ளது.

மேற்கிந்திய அணியின் சிறந்த சுழற்பந்தா - ளர்களுள் ஒருவரான நரைன் டெஸ்ட்டில் 11 இலக்குகள் ஒருநாள் போட்டிகளில் 77 இலக்குகளையும் ரி20 போட்டிகளில் 33 இலக்குகளையும் கொய்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் இரண்டு தடவைகள் ஐந்து இலக்குகளை அவர் வீழ்த்தியுள்ளார்.





# செலர்சி அணி தடுமாறினாலும் ஜோஸ் மொரின்ஹோ தொடர்வார்

**கா**ல்பந்தாட்ட அணிகளில் மிகப் பிரபல்யம் வாய்ந்த அணிகளுள் ஒன்றான செல்சி அணியின் தற்காலகட்டத்திற்கான ஆட்டங்கள் சொதப்பலாகவே தொடர்கின்றன.

எனினும் அதனையிட்டுக் கவலைப்படத்தேவையில்லை என்கிறார் அவ்வணியின் உரிமையளர் ஜோஸ் மொரிக்ஹோ.

அணிக்கு உரமூட்டும் அனைத்து வளங்களும் திரட்டப்பட்டுவிட்டதாகத் தெரவித்துள்ள அவதானிப்பாளர்கள் செல்சி விஸ்வரூபம் எடுக்கும் என்கின்றார்கள்.



# பூப்பந்து வெற்றியாளர்

**ப**தினைந்து வயதிற்கு உட்பட்டோருக்கான சர்வதேசப் போட்டியில் ஜோஹ்-ஜின்-வெய் வெற்றியீட்டியுள்ளார்.

பதினைந்து வயதிற்குட்பட்ட சர்வதேசப் போட்டியில் வெற்றியாளரான இவரே முதலாவதாக இப்பட்டத்தை வென்ற மலேசியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கின்பொறியியல்துறை மூடப்பட மாட்டாது

## ரணில் தெரிவிப்பு



தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடம் ஒரு போதும் மூடப்பட மாட்டாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் தறை மாணவர்கள் கல்வி கற்பதற்கான அடிப்படை வளங்கள் எதுவுமின்றித் தமது பொறியியற் கற்கைகள் கடந்த பல வருடங்களாகத் தொடர்வதாகக் குறிப்பிட்டு வகுப்புகளைப் புறக்கணித்து வருகின்றனர்.

அத்துடன் தம்மை வேறு பல்கலைக்கழகங்களின் பொறியியல் துறைக்கு மாற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

17

# கிழக்கு மாகாணசபையின் தீர்மானங்

கிழக்கு மாகாண சபை அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள் வருமாறு

1. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூபாய் 3000 வழங்கப்படுதல்
2. நாவலடியிலிருந்து கடற்படை முகாம் வாயில் வரையிலான வீதியினை காப்பெட் வீதியாக புனர்நிர்மாணம் செய்தல்
3. மூதூர் மற்றும் திருக்கோவில், அட்டாளைச்சேனை வைத்தியசாலைகளை ஏ தரத்துக்கு உயர்த்துதல்.
4. கிண்ணியா வைத்தியசாலைக்கு தாதிகளுக்கான விடுதி அமைத்துக் கொடுத்தல்.
5. குச்சவெளி வைத்தியசாலையினை தள

17

# தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) பொதுக்கூட்டம் இன்று திருமலையில்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)ன் பொதுக்குழு கூட்டம் இன்று 05.12.2015 சனிக்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள ரெலோவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளதென ரெலோவின் நிர்வாக செயராளர் நித்தி மாஸ்டர் தெரிவித்தார்.

17

# "ஜனவரி 8ன் பின் நிம்மதி என்ற எதிர்பார்ப்பில் ஏமாற்றமே எஞ்சியுள்ளது"

## மட்டு மறைமாவட்ட ஆயர்

இந்த ஆண்டு தொடக்கத்தில் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது.

அத்தோடு புதிய தலைவரும் பொறுப்பினை ஏற்றுக்-கொண்டார்.

மக்களும் நிம்மதியான, சந்தோசமான வாழ்வினை வாழலாம் என மகிழ்ந்தார்கள். ஆனால் மழை பெய்தும் தூவானம் விடாத நிலைதான் தமிழர்களை பொறுத்தவரையும் தொடர்கிறது என மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை குறிப்பிட்டார்.

அவ்வாறானதொரு கட்டமாகவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நோக்கவேண்டி இருக்கின்றது 20, 30 வருடங்களாக உலக நிலைப்பாடுகள் எதுவும் தெரியாதவர்களாகவும், தமது மனைவி குழந்தைகளை சந்திக்கக்கூட வாய்ப்பில்லாத நிலையிலும், உண்பதற்கு உகந்த உணவு கிடைக்காத நிலையிலும் இன்றும் தமிழ் இளைஞர்கள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள் இவர்களை விடுதலை செய்யவேண்டும்

17



அதி.வண. கலாநிதி ஜோசப் பொன்னையா

# வெள்ள நிவாரண உலருணவுப் பொருட்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிர்ந்தளிப்பு

திருகோணமலை மாவட்டத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மூதூர் பிரதேசத்தில் வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளானவர்களுக்கு உலருணவுப் பொருட்களைப் பகிர்ந்தளித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரனின் தலைமையில் மூதூர் பிரசைகள் குழுவின் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்களின் வழிகாட்டிலில் நடைபெற்ற இப்பகிர்ந்தளிப்பில் முப்பது குடம்பங்களைச் சேர்ந்நதவர்களுக்கு சுமார் ஐந்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப் -பட்டன.

வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு கட்சியின் மூதூர் செயற்பாட்டாளர்கள் விஜயபாகு, ஜெயந்தன்,

17








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 05.12.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.